தென்மொழி

கதவு திறந்தது!

கதவு திறந்தது ;
கதிர்வான் எழுந்தது ;
கால் நடை கொண்டது. கடும்பணிக்கே!
உதவும் உளங்கள்
ஒன்றின ; மீண்டும்
உயிர்த்தேன் தமிழெனும் கண்மணிக்கே!

பழஞ்சுவர் இடிந்தது ;
பாதை தெரிந்தது ;
பம்பரக் கால்களும் சுழல் தொடங்கும்!
இழந்தபல் காட்சிகள்
இறவா நினைவுகள்
இயங்கின; பகையோ போய் முடங்கும்!

கம்பிகள் தெறித்தன ;
விலங்குகள் கழன்றன!
காவல் நெருக்குகள் எனைவிலகும்!
தும்பிகள் வந்தன ;
துந்துமி முழங்கின!
தோலா முயற்சிகள் நடைஉலவும்

வானம் அசைந்தது ;
மரங்கள் எதிர்ந்தன ;
வழிசுழன் றது; ஓ! நடக்கின்றேன்!
மானம் நிமிர்ந்தது ;
மார்பும் விரிந்தது!
மலை,வயல் வெளி;ஆறு கடக்கின்றேன்!

கண்கள் மலர்ந்தன!
கைகள் அசைந்தன!
கருத்துகள் மிதந்தன காற்றினிலே!
பண்களுந் தமிழே!
பாடலுந் தமிழே!
பயில்நா டகம்உயிர் ஊற்றினிலே!

ஆண்டா நடந்தது?
அனுச்சிதை வில்லை!
அடடா, உயிர்,உளம் உடலினிலே!
பூண்டஎன் கோள்நலம்!
புதுமைத் தோள் நலம்!
புதுப்புது விளைவுகள் நடையினிலே!

சுவடி 13. ஓலை: 8-12. விலை: உரு. 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

நமக்கு வந்த மடல்கள்.

0 : 499 புழுவாய்நெளி தமிழா! உடன் புலியாகியே எழுவாய்;
எழுவாய் உடன் எழுவாயென இசைத்தேநம துரிமை
முழுமூச்சுடன் எழுந்தாய் தமிழ்முடியே புனைந்திட நீ,
தொழுதேயுனை வரவேற்றனம் துயர்நீக்கிட வருக!

நரியாமவர் நயவஞ்சகம் நமையேநசுக் கிட நீ, [ருய்
எரியாம்மலை யொருநாள்வெடித் திடுமேஎனப்புகன்
புரியாதவர் இகழ்ந்தேயுனைப் புறம்பேசியே திரிந்தார்
திரியாதுளம் சிறையேகிநீ சிறந்தாய் நனி வருக!

—பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு.

0 : 500 தமிழினத்தின் தனிப்பெரும் தலைவா, தனித்தமிழ் இயக்கம் புரக்கும் தந்தையே, தங்களின் விடுதலைச் செய்தி குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கும் பொருட்டு விடுக்கும் வாழ்த்து மடல்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தரு தருவாய் தமிழினத்திற்குக் கிடைத்ததே 'தென்மொழி' இதழ் ஒன்றுதான். அவ்விதழ் தங்களின் சிறைக்குப் பின்னும் தொடர்ந்து கிடைத்திருப்பினும், அதில் தங்களின் உணர்ச்சி மிகு எழுத்துகளைப் படிக்காமல் பெரிதும் யான் மகிழ்வு கொள்ளவில்லை. இன்று நீங்கள் ஓராண்டிற்குப் பின்னர் வெளிப்பட்டுள்ளீர்கள். சிறையிலே பிறந்த 'ஐயை' தொடர்ச்சியை விரைவில் வெளியிட்டு எம்மனோரின் ஆவலை நிறைவு செய்க. உங்களின் விடுதலையால் எங்கள் உள்ளம் நிறைந்திருந்தாலும், சிலரின் அறிக்கையால் மனம் குழம்பியுள்ளோம்.

ஐயா நீங்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்திருந்து, இந்தத் தமிழினத்திற்கு விழிப்புணர்ச்சியைத்தந்து தென்மொழிக் கொள்கையில் வெற்றிபெறவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

என்றும் தென்மொழித் தம்பி,

—செ. அருள் இறைவோன், முகவை நகர்.

0 : 501 பெறலரும் நல்லாசானுக்கு, வணக்கம். தாங்கள் விடுதலையறிவிப்பைக்கண்டு கழிபேருவுவகை யடைந்தேன். தாங்கள் சிறையிலடைக்கப் பட்டதிலிருந்து பெரும்பகுதி என் எண்ணம் தாங்கள் காப்பாக இருக்கும் சிறையையே சுற்றியிருந்தது. ஒருகால் வாழ்நாள் முழுவதும் சிறையிடப்பட்டால்... ஐயகோ! எண்ணிப்பார்க்கவும் இயலவில்லை. மீகாமன் இல்லாக் கப்பலாகத் தத்தளித்துக்கொண்டிருப்போம். அப்படியொன்றும் நடவாது போனதற்கு இறைக்கு நன்றிக்கடப்பாடு உடையவனாகிறேன்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!

சுவடி : 13 ஓலை : 8-12
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி
இலக்கிய இதழ்

துலை-கும்பம்-தி. பி. ௨௦௦௮-அக்'76-மார்ச்சு-1977.
பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.
ஆசிரியர் : பூங்குன்றன். அறி. இ. (க.மு.)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

அறத்தின் கூறுகள்!

படிக்கு முன் ஒரு சில:

இக் கட்டுரையில் எழுதப்பெறுவன பொது நிலைக் குறிப்புகளே. சிறப்பு நிலையில் அவை எவரையும் குறிப்பிடுவன அல்ல. வழிவழி வந்த - ஆனால் என்றும் தடம் புரளாத இயற்கை வெளிப்பாட்டின் - அறத்தின் - மெய்க் கூறுகள் அவை. எனவே எக்காலத்திற்கும் அவை பொருந்தும். நீங்கள் அவற்றை அஃதாவது அவ் வறக்கூறுகளை மதிக்கலாம்; மதிக்காமற் போகலாம். ஆனால் அவை தம்மட்டில் எவ்விடத்தும், எக் கூறினும் ஒழுங்குபட இயங்கித் தம் கடமைகளைச் செய்யும்; கதிரவன் போல்; மழை போல்; காற்றுப்போல்; புயல் போல்! எனவே, அவற்றிற்கு நீங்கள் உட்பட விரும்பாமற் போனாலும், அவை உங்கள்மேல் ஆட்சி செலுத்தும்; உங்களைத் தூக்கும்; அல்லது தாக்கும்; உங்கட்கு உருக்கொடுக்கும்; அல்லது உருவழிக்கும்! எது நாம் விரும்பாமலே - நாம் அறியாமலே - நாம் இடங்கொடுக்காமலே - நாம் எதிர்க்கவிருக்கவே, அல்லது எதிர்க்காமலிருக்கவே

நம்மை அதன் ஆளுகைக் குட்படுத்துகின்றதோ, அதுவே அறம்! அதை நம் மூன்னோர்கள் தொடக்கக் காலத்திலேயே இயற்கையை ஊடுருவிக் கண்டனர்; அதன் விளைவை உணர்ந்து வியந்து மகிழ்ந்தனர். கருவியில்லாமலே கருவிகொண்டு ஆளும், அது; வில் இல்லாமலே குறித்த இலக்கை எய்து வீழ்த்தும், அது; தீ இல்லாமலே எரித்துக் கருக்கும், அது! இதில் ஐயங்கொண்டவர்கள் அழிந்த கதைகள் பல; இதன் மெய்ம்மங்கண்டவர்கள் உய்ந்த கதைகள் பல; இவை வரலாறு. இவ்வரலாற்றில் நாம் அனைவரும், அஃதாவது நீங்களும் நாங்களும் நம்மை யறியாமல் ஒரு கால எல்லைக்கோட்டின்-ஒரு கதையின் நாடக உறுப்புகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றோம். இதில் அவரவர்க்கிட்ட உறுப்புக் கூறுகளே அவரவர் அறக் கூறுகள். நம் அறிவுரிமைக் கேற்ப அந்நாடக வுறுப்பை நாம் ஆடித் தீர்த்தாகவேண்டும். அவ்வுரிமை வட்டம் மீறப்படும் பொழுது நம் உறுப்புரிமையினின்றும் வெளியேற்றப்படுகின்றோம். ஏனெனில் அந்தக் கதைக்கும் நாடகத்திற்கும் ஆசிரியர் வேறு ஒருவர். இயக்குநரும் அவரே! அந்நிலையில் நமக்காக நாமே அழலாம்; நம்மைச் சுற்றிப் பலர் அழலாம். ஆனால், நாம் இழந்த அவ்வுறுப்புரிமை நமக்கு மீண்டும் தரப்படுவதில்லை. இஃது உண்மை. உண்மை; முக்காலும் உண்மை!

— இங்கு இரண்டு அறக்கூறுகள் சொல்லப் பெறுகின்றன. இரண்டும் நாம் அறிந்தவை; ஆனால் புறக்கணித்தவை. இப்பொழுதும் நாம் முழுமையாக உணராதவை. இருப்பினும் அவை நாம் மீண்டும் மீண்டும் நினைவூட்டிக்கொள்ள வேண்டியவை. அவற்றில் ஓடும் ஊடிழைகளை இக்கால நிகழ்ச்சிகளுக்கும் பொருத்திப் பார்க்கலாம்; எக்கால வரலாற்றினும் ஊடுருவிப் பார்க்கலாம்.—இனி அவற்றை அறிவுச் செருக்கின்றி, அகமுணைப்பின்றிப் படித்துப் பாருங்கள்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்!

அரசியல் என்பது ஆளுமை இயல். ஒருவரை ஆளுவதும் அது. பலரை ஆளுவதும் அதுதான்.

அக்கால அரசியல் ஒருவரால் வெளிப்படையாக நடத்தப்பெற்றது. ஏனெனில் பலர் அவ் வாளுமை அறிவற்றவர்கள்; உரிமை உணராதவர்கள். இன்றைய அரசியல் அவ்வியலறிவுள்ளவர்கள் பலரால் செய்யப் பெறுகின்றது. வேறுபாடு பெயரளவில் இல்லை; செயலளவிலும் இல்லை. இயக்க அளவில்-எண்ணிக்கை அளவில்-ஒன்று பல ஆனது. எனவே, அதற்குரிய அறம் என்றும் மாறாதது,

அரசு என்றாலே நல்லரசுதான்; செங்கோலரசுதான்; கொடுங்கோன்மை எல்லாரும் வெறுக்கப்படுவது ஆகையால்!

அரசே மக்கள் நலனுக்காக அமைந்ததுதான், மக்கள் நலனை நாடாதது அரசியல் ஆகாது.

மக்கள் என்பவர் யார்?

எல்லாருமே மக்கள் தாம்! அவருள் அறிந்தவர் இருப்பர்; அறியாதவர் இருப்பர்; உயர்ந்தவர் இருப்பர்; உயராதவர் இருப்பர்; நல்லவர் இருப்பர்; நல்லவரல்லாதவர் இருப்பர்! அகர முதலியில் உள்ள குணப் பெயர்களுள் நல்லதற்கும் தீயதற்கும் என்னென்ன சொற்களுண்டோ, அச்சொற்களுக்கெல்லாம் பொருளாக ஒருவரோ, ஒரு கூட்டத்தாரோ — ஆனால் அனைத்து வேறுபட்ட நிலைகளுக்கும் பொருத்தமாகும்படி—எல்லாரும் சேர்ந்தவரே மக்கள்!

அரசியலுக்கு வருபவன், மக்கள் எல்லாரும் இவன் எதிர்பார்க்கின்றபடி இருப்பார்கள் என்று எண்ணி வரக்கூடாது. அல்லது எல்லாருமே நல்லவர்களாக இருப்பார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. எல்லாரும் நல்லவர்களாக இருந்தால் இவனுக்கும் வேலையில்லை; அரசுக்கும் வேலையில்லை.

எனவே, மக்கள் எப்படியிருந்தாலும், அரசுக்கு வருபவன் இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதில் மட்டும் முறையுண்டு. ஓர் ஓடத்தில் ஏறுபவர்கள் யாராயிருந்தாலும், ஓடம் ஓட்டுபவன் அவன் வேலைக்குப் பொருத்தமானவனாகவும் — எல்லாரையும் அக்கரையில் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் அக்கறையுள்ளவனாகவும், ஆர்வமுள்ளவனாகவும் இருத்தலவேண்டும் என்பதில், அவ்வோடத்தில் உள்ள திருடனுக்கும் அக்கறை; அறிஞனுக்கும் அக்கறை!

இந்த அக்கறைக்கு ஊறு நேராதவாறு நடத்துகொள்வதே ஓடக்காரனின் கடமை, பொறுப்பு! இஃது அவனே விரும்பி ஏற்றுக்கொண்ட வேலை. இந்த வேலையில் அவனுக்கு விருப்பமில்லையானால் அவனும் ஓடத்தில் அமைவாக அமர்ந்து கொள்ளலாம் அதன்பின் ஓடத்தை எவன் வலித்துப்போக விரும்புகின்றானோ அவன் வலித்துக் கொண்டு போகலாம். எவனுக்கும் அவ்வேலை கட்டாயமில்லை; விருப்பந்தான்.

எனவே தன் விருப்பமாக ஒருவன் ஏற்றுக்கொண்ட கடமையை, மக்களுக்காக உழைக்க முன்வந்த பொறுப்பை — பிழையில்லாமல் செய்யவேண்டும்!

பிழை என்றால் என்றால் என்ன!

குற்றம், தவறு, பிழை—முதலிய பல சொற்கள் ஒரு பொருள் குறித்தன என்பர் ஆசிரியர்.

ஆனல் உண்மை அதுவன்று,

தவறு வேறு, பிழை வேறு; குற்றம் வேறு,

(விரிவான விளக்கங்கள் எழுத இஃது இடமில்லை; வேண்டிய விடத்து வரும்.)

சில பொது விளக்கங்கள் மட்டும் இங்கு தருகின்றேன்,

தவறு — ஒரு நிலையினின்று சிறிது மாறுபடுவது; அஃதாவது சரியானதைச் செய்யாதது; அதைச் செய்யாமல் தவறுவது; இது கடுமையான மனவேறுபாடன்று; எனவே பொறுத்தற்குரியது, இது,

பிழை — சரியானதை விட்டு பிழையானதொன்றைச் செய்வது, ஒரு நிலையை விட்டு வேறொரு நிலைக்கு மாறுபடுவது.

இது கொஞ்சம் கடுமையானது. இதற்குச்சிறிது தண்டனை உண்டு. அத்தண்டனை, பொருள், இடம், காலம், வினை, விளைவு இவற்றைப் பொறுத்தது,

குற்றம் — வேண்டுமென்றே — மாறுனதென்று தெரிந்தே — நம்ப வைத்தோ, அதிகாரச் செருக்காலோ — வல்லமையாலோ, வலக்காரத்தாலே செய்து விடுவது. கடுந் தண்டனைக்குரியது இது. இதனுல் இதைச் செய்தவன் குற்றவாளி.

தவருளி என்ருே பிழையாளி என்ருே சொல் வழக்குகள் இன்மையே அவற்றின் கடுமையின்மையைக் காட்டும்.

(இவ்விடத்து இவ்வளவு விளக்கம் போதும்)

இனி, நம் முன்னேர்கள் என்ன கூறினர்?

நாம் வேறு; நம்மை ஆள வருபவன் வேறு; நமக்கு வேறு கடமை; நம்மை ஆள வருபவனுக்கு வேறு கடமை. வேறு முறை!

நாம் தவறலாம்; நம்மை ஆள வருபவன் தவறவே கூடாது!

நாம் தவறினுல் நமக்குத்தான் கேடு. நம்மை ஆள்பவன் தவறினுல் உலகுக்கே கேடு. எனவே அவன் தவறவே கூடாது என்றனர்.

ஒரு வேளை — ஏதோ ஒரு முறை — தவறினுலும் அவன் பிழை செய்யவே கூடாது.

ஒரு பிழையினுல் அரசே மாறிவிடலாம்; அல்லது மக்களே அழிக்கப்படலாம், எனவே அவன் பிழை செய்யவே கூடாது என்று எச்சரித்தனர். இன்னேர் உண்மையும் அதில் உண்டு.

அரசன் பிழை செய்தால் அவனைத் தண்டிப்பவர் யார்?

எனவே, அவன் தண்டிக்கப்படாமல் தப்பிவிடப்படுகிறான். அப்படி ஒரு முறை அவன் பிழை செய்து தப்புவனாகில் மீண்டும் பிழை செய்வான்; பின் அடுத்தடுத்துச் செய்வான்; அதன்பின் தொடர்ந்து பிழைகளே செய்தாலும் கேள்வியிராது,

எனவே, ஒரு பிழை செய்கையிலேயே, மக்கள் அலைக்கழிக்கப் படத் தொடங்குகிறார்கள்,

கேட்கவியலாமற் போனால் அவன் திருந்தவும் முடியாது. எல்லாமும் அவன் விருப்பமே! அவன் செயலே சரி என்றாகி விடுகிறது,

எனவே, அவனை யார் கேட்பது?

அறம் கேட்கும் என்பது ஆன்றோர் வாய்மொழி!

பிழை செய்பவன் குற்றம் செய்யும் அளவுக்கு அறம் விடுவதில்லை, எனவேதான், அரசன் பிழை செய்யும்போதே அறம் ஒறுத்து விடும் என்றனர்,

அவனை எவரும் கேட்கவியலாது என்று மக்கள் கொள்ளும் கவலையுணர்வு அறத்தைத் தட்டியெழுப்பும். இதைப்பற்றி நம் அறநூல்கள் சொல்வன கோடி!

அவையனைத்தையும் இங்குக் கூறவேண்டா.

இனி, 'அறம் கேட்கும்' என்றுகூட அவர்கள் அவ்வளவு அமைதியாகச் சொல்லவில்லை,

'அறம் கூற்றாகும்' என்று வன்மம் புலப்பட—வெகுளி தோன்ற -சாவித்துள்ளார்கள். அவ்வெகுளிச் சொற்கள் மந்திரச் சொற்கள் என்பதை அவ்வப்பொழுது காலம் உணர்த்தி வருகின்றதன்றோ?

எனவே, மக்களின் வாய்கள் மூடப்படும்பொழுது அறம் வாய் திறக்கிறது!

மக்களின் கண்கள் குருடாக்கப்படும் பொழுது அறம் கண் விழிக்கிறது!

மக்களின் காதுகள் செவிடாக்கப்படும் பொழுது அறம் காது கொடுக்கிறது!

மக்களின் கைகள் கட்டப்படும்பொழுது அறம் கையவிழ்க்கிறது!

மக்களின் வாய்கள் அடைக்கப்படும் பொழுது அறம் வாயசைக்கிறது!

மக்களின் மனத்தில் நடுக்கம் தோன்றும் பொழுது, அறம் அரசு கட்டிலை நடுங்க வைக்கிறது!

—இதுதான்,

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்னும் அடிக்குக் கிடைக்கும் புறப்பொருள்,

அதன் அகப்பொருள் வான்போல் விரிந்தது,

அஃது இங்குத் தேவையில்லை,

வெருவந்த செய்யாமை.

திருக்குறளில் வெருவந்த செய்யாமை ஓர் அதிகாரம், பொருளதிகாரத்தில், அரசியலில், செங்கோன்மைக்கும் கொடுங்கோன்மைக்கும் அடுத்து, இவ்வதிகாரம் வரும்.

வெருவுதல் என்பது அஞ்சுதல், ஆனால் அச்சம் வேறு. வெருவுதல்வேறு,

அஞ்சுதல் முன்பே தெரிந்த ஒன்றுக்கு மனம் நடுங்குதல்.

வெருவுதல் என்றுமே தெரியாத ஒன்றுக்குத் திடுமென மனம், உடல், உயிர் அனைத்தும் நடுங்குதல்.

(இவற்றின் விளக்கமும் இன்னும் பிற விரிவான மெய்ப்பொருள் விரிவுகளும், நான் சிறையில் எழுதத் தொடங்கிய 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' என்னும் பரந்த நூல் வருங்கால் கண்டு கொள்க. இக்கால், இவ்வதிகாரத் தலைப்பையொட்டிய சில பருப்பொருள் உண்மைகளே, காலங்கருதி ஈண்டு சொல்லப்பெறுகின்றன)

எனவே, வெருவுதல் அச்சத்தினும் பலமடங்கு பெரியது.

அச்சம் எப்பொழுதோ ஒருமுறை வந்து போவது.

வெருவுதல் மேன்மேலும் தொடர்ந்து வருவது. அடுத்து என்ன நடக்குமோ, அடுத்து என்ன நடக்குமோ என்று உயிரில் பற்றிய நெருப்புப் போல்வது.

பாம்பு புகுந்த வீட்டில் கண் மூடாது கிடந்த ஒருவன், நெடுநாள் அகற்றிய தூக்கத்தால் அரவணைக்கப்படும் பொழுது, விழிகள் மூடுவதும், 'வெருக்'கெனத் திறந்து மிரளப் பார்த்து நடுங்குவதும் — இந்தச் சொல்லுக்குரிய உணர்வுப் பொருள் என்க.

—இவ் வெருவந்த செய்யாமை அதிகாரம் அரசனுக்குச் சொல்லப்பெற்றது.

அரசனின் செங்கோன்மை பற்றியும் கொடுங்கோன்மை பற்றியும் விளக்கிய மெய்ப்பொருளாசிரியர், அவன் இதுவும் செய்தல் கூடாதெனத்தடுத்து விலக்கியதாகும் இவ்வறவுரை.

உலகில் வேறு எந்நூலாசிரியரும் இந்நுண்ணுணர்வறத்தினை இத்துணை ஆழமாகப் புலப்படுத்திற்றிலர்.

(அவ் விளக்கங்களை ஆண்டு ஆய்வோம்.)

ஈண்டு நாம் காட்டப்புகுந்தது, இத்தலைப்பு விளக்கத்தில் ஒரு சிறு கூறே!

அரசன் மக்களை 'வெருக்கு' 'வெருக்கென்று' அஞ்சி நடுங்கும்படி செய்யக் கூடாதென்பது அப் பொய்யாமொழிப் புலவர் கூற விரும்பிய கருத்து

அப்படிச் செய்தால் அவ்வரசு, கட்டாயம் விரைந்து கெட்டுவிடும் என்றறிவுறுத்துகிறார் அப்புலவர் பெருந்தகை.

அப்படி மக்கள் வெருவுதற்குரியனவாக அரசன் செய்யும் சில அடையாள வினைக் குறிப்புகளைக் குறளாசிரியர் காட்டியுள்ளார்.

அவை கடுமொழியும் கையிகந்த தண்டமுமாம்!

கடுமொழி என்பது என்ன?

சுடச்சுடச் சொல்வதா? இல்லை. கடு என்றால் நஞ்சு

எனவே, கடுமொழி — நஞ்சு மொழி. அஃதாவது நஞ்சுபோல் விடாமல் தீமை தரும் மொழி. நன்மை தராத மொழி. மக்கட்கு நஞ்சு போல் நலத்திற்கு ஊறு தரும் மொழி! அது சுவையாக இருக்கலாம்; இனிக்கலாம், சிரிப்பில் சிதறலாம்; அழுகையில் நனையலாம்; அக்கறையில் ஊறலாம்.—ஆனால் விளைவு மட்டும் தவறாமல் தீமை தரக்கூடியதாக இருக்கும்.

இனி, கையிகந்த தண்டம் என்றால் என்ன?

கைக்கு மீறிய தண்டனை. தன் கையளவை மீறியது

தன் கை போதாதென்று, தன் உறுப்பாளர் கைகளாலும் தரப் பெறுவது.

தன் கையால் தந்துவிட்ட அதிகாரத்தைத் தன் கையாலேயே தடுக்க வியலாத நிலையில் உள்ள ஒரு நிலையையே கையிகந்தது என்று சொல்கிறார்.

அவனைத் தண்டி என்று ஒருவனுக்குச் சொன்னால், அவன் அவனைத் துண்டிக்கும் நிலையே அது.

இவ்விரண்டு செயல்களும் வெருவந்த செய்யாமை அதிகாரத்துள் ஏழாம் குறளில் காட்டப்படும் செய்வினைக் குறிப்புகள்.

இச்செயல்கள் என்ன செய்யுமாம். அவ்வறவாசிரியர், அவை அரசனை அரம்போல் தேய்க்கும் என்கிறார். குறளைப் பாருங்கள்.

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். –567.

இவ்விரண்டு அறக் குறிப்புகளுந்தாம் என்னைத் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' எழுதத் தூண்டியவை,

எனவே. முழு உரையையும், உரை நூலுள் காண்க,

அதுவரை பொறுத்திருக்க.

இப்பொழுது சொல்ல விரும்பியது இவ்வளவே! ○



தென்மொழித் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,)
19 ஈ ஆ (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம் : சென்னை-5.
2. கால முறை : திங்கள் ஒருமுறை.
3. அச்சிடுவோர் பெயர் : திருவாட்டி, மா. தாமரை.
இனம் : தமிழர்.
முகவரி : தென்மொழி அச்சகம், சென்னை-5,
4. வெளியிடுவோர் பெயர் : திரு. பெருஞ்சித்திரன்,
இனம் : தமிழர்.
முகவரி : தென்மொழி அச்சகம், சென்னை-5.
5. ஆசிரியர் பெயர், முகவரி : திரு. பெருஞ்சித்திரன், சென்னை5.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும். } திரு. பெருஞ்சித்திரன், சென்னை – 5.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

15—2—1977,
சென்னை-5.

—பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்.)

தென்மொழியையும் குடும்பத்தையும் கட்டிக்காத்த அன்புள்ளங்களுக்கு நெஞ்சு நிரம்பிய நன்றி.

நான் கடந்த ஓராண்டுக்காலமாகச் சிறையிலிருந்த அவ்விடைக் காலத்தில், தென்மொழி இதழையும், தென்மொழிக் குடும்பத்தையும், நன்கொடைகள் நல்கியும், ஆறுதல் கூறியும் பல்வகையாகத் துணையிருந்து கட்டிக்காத்த அன்புள்ளங்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் பெரியோர்களுக்கும் என் நெஞ்சு கனிந்து நிரம்பிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனித் தென்மொழி தொடர்ந்து வருவதற்கான அனைத்து முயற்சிகளும் செய்யப்பெற்று வருகின்றன.

எனவே, இதுகாறும் தென்மொழி ஆக்கத்திற்குப் பல்லாற்றானும் துணையிருந்த அன்பர்களும் முகவர்களும், இனியும் முன்போலவே தோன்றாத் துணையாக இருந்து உதவுவதுடன், புதிய உறுப்பினர்கள் சேர்த்தும், விற்பனையாளர்களை ஏற்படுத்தியும் உதவுமாறு மன, மொழி, மெய்களால் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை-5.
1—3—77

அன்பன்,
பெருஞ்சித்திரன்.

சோற்றிடை மானம்!

வருவீர் தமிழரீர்! வருவீர் தமிழரீர்!
திருவீறும் நந்தமிழ் தெருத்தமிழ் ஆகி
ஒருவர் வாயினும் உயிர்ப்பின்றி ஒலிக்குமால்!
ஒருவர் வாயினும் உயிர்ப்பின்றி ஒலிக்குமேல்
கருவழிந்து போகாதோ? ஆகலின் காத்தற்கு
வருவீர் தமிழரீர் வருவீர் தமிழரீர்!

வம்மின் புலவரீர்! வம்மின் புலவரீர்!
செம்மாந் தெழுந்தநம் செந்தமிழ் செழிப்பின்றி
விம்ம லுற்றழ வீதிவாய்க் கிடக்குமால்!
விம்ம லுற்றழ வீதிவாய்க் கிடக்குமேல்
நம்மவர் உய்வரோ? ஆகலின் நயத்தற்கு
வம்மின் புலவரீர்! வம்மின் புலவரீர்!

எழுவீர் இளைஞரீர்! எழுவீர் இளைஞரீர்!
தொழுதகை நந்தமிழ் தூய்தகை யிழந்தே
இழிதகைப் பட்டாங்கு எழில்கெடச் சிதையுமால்!
இழிதகைப் பட்டாங்கு எழில்கெடச் சிதையுமேல்
அழிவும் நமக்கன்றோ? ஆகலின் அதுபேண
எழுவீர் இளைஞரீர்! எழுவீர் இளைஞரீர்!

கூடுக மகளிரீர்! கூடுக மகளிரீர்!
பீடுறு நந்தமிழ் பிழைபடச் சாம்பியே
ஆடுகள மகள்போல் அரணழிந் திழியுமால்!
ஆடுகள மகள்போல் அரணழிந் திழியுமேல்
நாடுவ தெதனையோ? ஆகலின் நலந்தரக்
கூடுக மகளிரீர்! கூடுக மகளிரீர்!

செந்தமிழ் இனமே! செந்தமிழ் இனமே!
முந்துயிர்த் தெழுந்த நந் செந்தமிழ் இனமே!
எந்த நடையதும் ஏற்றிடத் துணிவதோ?
எந்த நடையதும் ஏற்றிடத் துணிந்தவர்
சொந்த நடையதும் மறந்தது காணிரோ?
சோற்றிடை மானம் அழிந்ததும் காணிரோ?

திருவள்ளுவர் யார் ?

சேலம், புலவர். க. நடேசனார்.

(முன்னாள் சேலம் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும், என் முன்னாள் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியரும், திருக்குறள் திறவு, (இறைமாட்சி, நீத்தார் பெருமை) முதலிய திருக்குறளியல் மெய்ப்பொருணூல்களின் ஆசிரியரும் ஆகிய புலவர் உயர்திரு. க. நடேசனார் அவர்கள், கடந்த 1976, சூன் திங்கள் 8-ஆம் பக்கல்; செவ்வாய்க்கிழமை பகல் 3-40 மணியளவில் இயற்கையெய்தினர் என்னும் செய்தி, என் சிறை வீட்டிற்குப்பின் கிடைத்த துயரச் செய்திகளுள் ஒன்று.

புலவர். க, நடேசனார் அவர்கள் சிறந்த மெய்ப்பொருள் ஆய்வாளர். திருக்குறளில் ஆழ்ந்தகன்ற ஆராய்ச்சிச் செவ்வியர். பழந்தமிழ்க் குமரிநாட்டுக் கொள்கை படைத்திருந்த அச் செந்தமிழ்ச் சான்றோர், நாம் இழந்த பெருமை அனைத்தும் ஏற்றம் பெற்றுய்யுமாறு, தமிழே மூச்சாக, வாழ்வாகக் கொண்டுயிர்த்த பெருமகனாராவர்.

அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது. இவ்வுரை அவரின் திறக்குறள் திறவு (நீத்தார் பெருமை) என்னும் அரிய ஆராய்ச்சி நூலினின்றெடுக்கப் பெற்றது. அவர் அந்நூலின் கண் பெய்தெழுதிய சொற்களில் ஒன்றினையும் மாற்றாமல் அப்படியே இக்கட்டுரை வெளியிடப் பெறுகின்றது, வடமொழிச்சொற்கள் ஆங்காங்கே பயின்று வரலாம். அவற்றை அறிஞர் பொருட்படுத்தல் வேண்டா. அவரின் பேரறிவு சான்ற மெய்க்கொள்கை நந்தமிழறிஞர் பேணிக் கொள்ளற்பாலது. அவ் வந்தண்மைச் சான்றோரின் புகழ் என்றும் நந்தமிழகத்துப் பொன்றாது நின்று, நீடு நிலவுவதாக. —பெருஞ்சித்திரன்.)

இந்நிலையில் வள்ளுவர் யார் ? வைதிகரா ? அவைதிகரா ? ஆத்திகரா ? நாத்திகரா ? சிவநெறியினரா ? வைணவரா ? சைனரா ? பவுத்தரா ? சாங்கியரா ? சமரச சன்மார்க்கப் பொது நிலையினரா ? பல நெறியிலும்—நூலிலும், கண்ட நன்மையெல்லாம் திரட்டித் தந்த திருவாளரா ? வழவழப்பாளரா ? அவர் கொண்ட தத்துவக் கருத்து யாது ? அக்கருத்தை விளக்கிய முதல் நூல் யாது? அவரால் பாராட்டப் பெறும் மறை நூலார்—தத்துவ நூலார், யார் ?

அவர் மேற்கொண்டொழுகிய அறம் எவ்வகைத்து ? ஒழுக்கம் எவ்வகைத்து ? எனப்பல கேட்கலாம். விடை காண்பதுதான் அரிது. மிக மிக அரிது.

வைதிகரா ?

காலஞ்சென்ற மகாவித்துவான் ரா. இராகவையங்காரவர்கள்; வள்ளுவரை வைதிகரென, வருண வேள்வியரெனக் காட்டுவர் ; செந்தமிழ்த் தொகுதி 1, பகுதி 4, போன்றவற்றில் வெளியான இவர் ஆராய்ச்சிப் பகுதிகள் பலவும் காண்க. இங்ஙனம் கூறுவோர் மற்றும் பலர்.

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்
அறவோரே அந்தணரென்போர். (30)
தாங்கேட்ட மறை (சுருதி) பிறர்க்கு உய்த்து உரைக்கலான்
அறை பறையன்னர் கயவர். (1076)
பிறர்மேல் வடுக்காண வற்றாகும் கீழ். (1079)
தேவர் அனையர் கயவர். (1073)
கொலைவினையராகிய மாக்கள் புலைவினையர். (329)
நீத்தாருள் எல்லாம் கொல்லாமை சூழ்வான்தலை. (325)
பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும். (972)

இவை போல்வன காட்டி மேற்படி கருத்தை மறுத்து வள்ளுவரை அவைதிகர் என முடிப்போரும் பற்பலர்.

பவுத்தரா ?

வள்ளுவரைப் பவுத்தர் எனக் கருதுவாரும் உண்டு.

"உயிரிற்றலைப்பிரிந்த ஊனுண்ணார்." (258)
"விலைப்பொருட்டால் ஊன் தருவார் இல்." (256)
"பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்." (271)

என்பன காட்டிப் பவுத்தரல்லர் என முடிப்பாரும் உண்டு. ஏன் ? உயிர் நீங்கியவற்றின் — இறந்த உயிர்களின் — ஊனையும் விலையூனையும் உண்ணலாம் என்பதும், பூதங்கள் நான்கென்றே தொகை கோடலும் பவுத்தர் கொள்கை. மேற்காட்டிய குறட்பகுதிகள், இக்கொள்கைக்கு மாறாக உள்ளன. ஆதலின் குறளாசிரியர் பவுத்தரல்லர் எனக் காட்டுவர்.

சைனரா ?

வள்ளுவரைச் சைனரெனக் கருதுவார் பலர். இவர்கள் காட்டும் வலிய சான்றுகளுள் ஒன்று, நீலகேசியுரை எழுதிய சைன ஆசிரியர் ஒருவர் திருக்குறளை எமது நூல் என்னும் பொருளில்,

'எம் ஒத்து' 'எம் ஒத்து' 'எம் ஒத்து'

எனப் பலவிடங்களில் குறிப்பிடுவது. இதனால் வள்ளுவர் சைனராக முடிவர் எனின், சிவநெறிச் சான்றோர் சிலரும், இங்ஙனம் பொருள் படுமாறு குறள் நூலையும் வள்ளுவரையும் கூறிச்செல்வர்; எனவே, வள்ளுவர் சைவராகவும் முடிவர் என்று மேற்படி கருத்தை மறுத்துரைப்பர் சிலர் ;

"எம் அடிகள் வெண் குறள்"
"திருவள்ளுவப் பெயர் கொள் எம்மான்"
"வெங்கை நாயகர் (சிவம்) சொன்ன அறத்தூய்மை
உணர்ந்தவர்"

என்று இங்ஙனம் திருவள்ளுவரையும் குறளையும் தமக்கு உரிமைப் படுத்திப் பாராட்டிப் போற்றும் தென் நெறிச் சைவர் சிவப்பிரகாசர் பாடற் பகுதிகளையும் இவர்கள் தமக்கு ஆதாரமாகக் காட்டுவா. மேலும் இவர்கள் பற்பல ஆதாரங்களால் வள்ளுவரை சைனரெனக் கொள்ளார். ஏன் ? சைவர்கள், இல்லறத்தாரை அணுவிரதியரென்றும் துறவறத்தாரை மகா விரதியரென்றும் கூறுவர். துறவறம் இல்லறத்தைவிடச் சிறந்தது; முதன்மையானது எனுங் கருத்துடையவர் சைனர் என்பது, இதனால் புலனாகும். ஆனால் வள்ளுவரோ இல்லறத்திற்கே முதன்மை தருவர். 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே' எனத் தேற்றமாக—தெளிவாக—முடிவாக—முடித்துக்கூறி இல்லறத்தைச் சிறப்பித்துப் போற்றுவர். துறவறத்துக்கு —தவத்துக்கு—சிறப்புக் கூறவேண்டிய இடத்திலுங்கூட.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றையவர்கள் தவம், (263)

துறந்தாரைக் காக்கவேண்டி மற்றவர் தவத்தைவிட்டு இல்லறம் மேற்கொண்டனரோ ? என ஐயப்பொருள் படவே கூறுவர். ஐயம் படக் கூறுவதைவிடத் தேற்றம்படக் கூறுவதே முடிந்த முடிபாம் என்பதை யாரும் நன்குணர்தல் கூடும். எனவே வள்ளுவர் முடிவு

இல்லறமே சிறந்தது; முதன்மையானது என்பதாம். இம்முடிவு சைனரின் சித்தாந்தத்துக்கு—முடிவுக்கு—மாறுனது.

மேலும், சைனர்கள், மகளிர்க்கு வீடு பேறு இல்லை: பெண்கள் மோட்சம் அடைவதில்லை என்னுங் கொள்கையுடையவர்கள். வள்ளுவரோ, ஆண்கள் வீடு அடையக் கூடுமாஞல் பெண்களும் வீடு அடைதற்கு உரியவர்களே எனுங்கருத்துடையவர். இதனை, வள்ளுவர் "வாழ்க்கைத் துணை நலம்" கூறுமிடத்தில் —மகளிர் நலமும் சிறப்பும கூறுதற்காக வகுத்துக்கொண்ட அதிகாரத்தில்—நன்கெடுத்து விளக்குவார். 'பெருஞ் சிறப்பும் புத்தேளிர் வாழும் உலகும் பெற்ருன் பெறின் பெண்டிரும் பெறுவர்' எனக் கூறுவர். இங்ஙனம் கூறும் குறள்:—

பெற்ருன் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு, (58)

இதன் சொற்பொருள்:—பெருஞ்சிறப்பு - பெருஞ்சிறப்பு எனப் படும் வீட்டையும் (மோட்சத்தையும்), புத்தேளிர் வாழும் உலகு— தெய்வங்கள் வாழும் துறக்க உலகையும், பெற்ருன் பெறின்— பெண்ணை வாழ்க்கைத் துணையாகப் பெற்ற ஆடவன் அடையக் கூடுமாஞல், பெண்டிர் பெறுவர்—அவ்வீட்டையும் தெய்வ உலகையும் வாழ்க்கைத் துணையாதற்குரிய பெண்டிரும் பெறுவர்.

விளக்கம்:—'சிறப்பு' என்னும் சொல், இப்பொருள் தருதலை— மோட்சம், வீடு எனப் பொருள்படுவதை—'சிறப்பு என்னும் செம் பொருள்' (358) 'சிறப்பு ஈனும்' (31) என வருமிடங்களில் பரிமேலழகர் கூறிய உரைகளும் நன்கு விளக்கும். காண்க. 'பெற்ருன்' என்பதற்கு முன்னும் 'பெண்டிர்' என்பதற்கு முன்னும் முறையே, 'வாழ்க்கைத் துணையாக' 'வாழ்க்கைத் துணையாதற்குரிய' என்னும் சொற்கள், வாழ்க்கைத் துணை நலம் எனும் அதிகாரம் பற்றி வருவித்து உரைக்கப்பட்டன. 'உம்' என்னும் இடைச்சொற்கள் செய்யுள் விகாரத்தால் மறைந்துள்ளன. அவற்றை ஏற்ற இடங்களில் (பெண்டிர், சிறப்பு, உலகு என்னும் சொற்களோடு) கூட்டிப் பொருள் கொள்ளுக. 'பெண்டிர்' எனப் பன்மைச் சொல்லை ஆண்டதற்கேற்ப, ஆடவர்களைக் குறிக்குங்கால், பெற்ருர் எனப் பன்மைச் சொல்லை ஆளவில்லை. 'பெற்ருன்' என ஒருமைச் சொல்லையே ஆண்டுள்ளனர்.

ஏன்? பெற்றார் எனப் பன்மைச் சொல்லைப் பெய்திருப்பின் அது, இருபாலுக்கும்—ஆணுக்கும் பெண்ணுக்கும்—பொதுவாய்ப் பெண்களையும் குறிக்கக்கூடும். ஆதலின் 'பெற்றான்' என ஒருமைச்சொற் பெய்து, ஆடவனையே தெளிவாய் உணர்த்துமாறு செய்துள்ள நுட்பம் தெளிக. மயங்கற்க. ஆடவன் வீடு பேறடையக் கூடுமாறால் பெண்டிரும் அடையக்கூடும்; இதில் ஆண் பெண் என வேற்றுமை கருதல் சாலாது என்பது கருத்து. "வீடடைபவர் ஆணெனப் பெண்ணென வேறோ" எனத் தென்னெறி நூலார் கூறுவதும் காண்க. சைனர் நெறி இங்ஙனம் கூறாது. சீவகன் வீடு பெற்றான்; அவன் மனைவியர் வீடு பெறாமல் துறக்கம—சுவர்க்கமே—பெற்றார்; இதுவும் ஏசு பெண் பிறப்பொழித்து ஆண்களாய் மாறிய பின்னரே பெற்றனர் எனச்சிந்தாமணி கூறுவது, பெண்டிர்க்கு வீடில்லை எனும் இக்கொள்கை பற்றியே. "ஏழைப் பெண் பிறப்பு இடியச் சிந்தித்தார்"; "ஏசு பெண்ணொழித்து இந்திரர்களாய்த் தூய ஞானமாய்த் துறக்கம் எய்தினார்" (சீவக சிந்தாமணி-3120, 3121) எனச்சீவகன் தேவியாரின் நோற்றுயர்வு பேசப்படுதல் காண்க. (தொடரும்)

பழைய படிகள் சலுகை விற்பனை!

தென்மொழி அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

தமிழ் நலங்கருதியும், அறிவு விளைவு நோக்கியும், பழந் தென்மொழி இதழ்கள், சுவடி 10 முடிய, சில இடை ஓலைகள் தவிர்த்த அனைத்து ஓலைகளும், தனிப்படி ஒன்று 25 காசு மேனி விற்பனைக்குக் கிடைக்கும்,

இச்சலுகை விற்பனை இரண்டு மாதங்களுக்கு மட்டுந்தான்!

பழைய இதழ்கள் கிடைக்காத அன்பர்கள் தங்களுக்கு வேண்டும் மொத்த இதழ்களுக்குரிய தொகையுடன் அஞ்சற் செலவையும் சேர்த்து விடுத்து, உடனே படிகளைப் பெற்றுக் கொள்வார்களாக,

100 படிகளுக்கு மேல் பெறும் விற்பனை முகவர்களுக்கு 25 விழுக்காடு கழிவும் கொடுக்கப்பெறும்,

உடனே முந்துக! மாணவர்களையும் அன்பர்களையும் ஊக்குக!

—அமைச்சர் தென்மொழி, சென்னை-5,

இரங்கற் செய்தி.

மறைமலையடிகளார் மகனார் சிவத்திரு மறை. திருநாவுக்கரசு அவர்களின் துணைவியார்

திருவாட்டி. ஞானம்மாள் மறைவு.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் மகனாரும், சிவநேயச் செல்வரும், தண்டமிழ்ப் பேராசிரியரும், பல்வகை வரலாற்று, சமய ஆய்வு நூலறிஞரும் ஆகிய சிவத்திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களின் வாழ்வின்பத் துணைவியும், வள்ளுவர் காட்டும் இல்லறச் செல்வியும், இரக்கமும் அன்புமே உருவமாய்க் கொண்டவரும், அடக்கமும் பொறுமையுமே அணிகலனாகக் கொண்டவரும் கணவர்க்குத் தக உடனாகி நின்று அவர் தமிழ், சமயத் தொண்டுகளுக்குத் துணைநின்ற தலைவியுமாகிய. சிவநேயச் செல்வி திருவாட்டி ஞானம்மாள் அவர்கள், கடந்த சுறவம் 17 (30–1—1977) ஞாயிற்றுக் கிழமை, சென்னை, சவகர் நகரில் அவர்களது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்னும் செய்தியினை அன்பர்களுக்கு மீளா வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்மொழிக் குடும்பத்துடன் ஒன்றியிருந்து, அன்பும் அருளும் காட்டி, ஆசிரியர் இல்லாக் காலை, அதற்குப் பல்வகையானும் துணை நின்ற அம்மையார் அவர்களின் மறைவால் துயருழந்து கையற்று நிற்கும், அம் மெய்த்தமிழ் சைவப்பெரியார் அவர்களுக்குத் தன் ஆழ்ந்த இரங்கலைக் குடும்பத்தின் சார்பாகவும், தமிழன்பர்கள் சார்பாகவும் தென்மொழி தெரிவித்துக் கொள்கின்றது.

அம்மையார் அவர்களின் புகழ்புரிந்த இல்லற வாழ்க்கைச்சிறப்பு நல்லறம் விளங்கும் இத் தென் தமிழகத்து நீடுநின்று நிலவுமாக!

—ஆசிரியர், தென்மொழி.

பிழை திருத்தம்.

அட்டைப் பாடல் ஆறும் பத்தி, இரண்டாம் வரியின் முதல் சீரை 'அணுச்சிதை' யெனத் திருத்திப் படித்துக்கொள்க. —அமைச்சர்.

- ஐயை ஓர் அழியாத பாவியம்; குலவிளக்கம்!
- அனைத்துப் பெண்டிர்க்கும் ஒரு கலங்கரை விளக்கம்!
- சிறையிலே எழுந்து சிறையிலேயே முற்றுப்பெற்ற சித்திரப் பாவியம் ஐயை!
- ஐயை நூல் வடிவாகவே வெளிவருகின்றது.

என்றோ ஒருநாள் ஏந்தலும் வருவான்;
அன்றிலை மணப்பான்; அணைப்பான்; என்றே
ஏங்கிட நாட்களை எண்ணிய ஐயையின்
நோக்கம் நிறைவேறிற்றா? அல்லது
ஏக்கந்தான் மிகுந்ததா? உள்ளத்தை உருக்கும் முடிவு!

- தீந்தமிழ்ச் சுவை துள்ளும் பல்சுவை யாப்பின் செந்தமிழ் நடையில் ஐயையின் 2 ஆம் பகுதி உருவாகியிருக்கின்றது!
- அன்பர்களின் அவா நீக்க விரைவில் கிடைக்கும்.

1,	முதல் பகுதி [புதிய பதிப்பு]	1—50
2	2- ஆம் பகுதி	3—50
3,	இரண்டு பகுதிகளும் இணைந்த முழு நூல்	4—50
4,	ஆங்கிலப் பதிப்பு [முதல் பகுதி]	அச்சில்

அமைச்சர், தென்மொழி சென்னை-5,

உலகியல் நூறு.

— பெருஞ்சித்திரனார் —

[மொழிபெயர்ப்பு : த. முத்துக்குமரன், க. இ.]

9. உறவியல்.

1. அன்பு நிலை.

தாயன்பே அன்பு தகுதந்தை அன்பதன் பின்
சேயன்பே எண்ணச் சிறந்ததுவாம்—காயின்ப
நேயன்பு சான்றோர் நிலையன்பு மற்றெல்லாம்
வாயன்பே துய்ப்பின் வரை, 41

பொழிப்பு : உலகத்து, தாயினது அன்புதான் அன்பு என்று சொல்லுதற்குரிய உயர் தகுதியைப் பெற்றது. அதன் பின்னர் தகுதியான தந்தை ஒருவரது அன்பு சிறப்பானதாம். அதற்கடுத்த நிலையில் வைத்து எண்ணத்தகுந்தது, ஒரு குழந்தை தன் தாயிடத்து வைத்திருக்கின்ற அன்பாகும். அதன்பின், காய்ப் பருவமாகிய இளமைப்பொழுதின் இன்பவுணர்வுகளுக் கிடையில் ஓர் ஆணொடு பெண்ணும், பெண்ணொடு ஆணும் கொள்ளுகின்ற நேயத்திற் கடிப்படையாகிய அன்பு சிறந்தது. இனி, அதற்கடுத்தபடியாக உள்ளது, சால்பு நிறைந்த பெரியோர்களின் நிலையான அன்பாகும். இவை தவிர, பிறரிடத்துத் தோன்றுகின்ற அன்புணர்வு எல்லாம், அவ்வவ் வழித் துய்க்கின்ற வரையில் காட்டப்பெறுகின்ற வெறும் வாய்ச் சொல்லால் அமைந்த அன்பே ஆகும்.

1. RELATIONSHIP.

1. ON LOVE.

In love, mother's first, father's next,
Of other's, child's, love is the best,
Then come youthful lovers, Lasting
Is elder's all else is boasting. 41.

In the world, mother's love is the love of the highest order. Next comes father's. Then comes the child's for its mother. Next there are those in the prime of youth who naturally love those of the opposite sex. But lasting is the love of the elders eminent in character. Barring these, manifestation of love in others is for the time being and is more of the nature of lip-service.

உ. சுற்ற நிலை.

தாமுறுவ துற்றம் தமையுறுவ தொண்சுற்றம்
ஏமம் இவையென்ப - ஏழையர்க்கு!—காமுறுவ
தென்றும் உகப்புடைமை ஈதல் இணைதலென
ஒன்றும் பழைமை உணர்ந்து! 42

பொழிப்பு: தாம் போய் இணைந்து உறவாடற்குரியவரே உற்றார் எனபபெறுவர்; தம்முடன் வந்து இணைந்து உறவாடுவர் வலிந்த சுற்றத்தார் ஆவர். ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு இவ்விரு திறத்தாரும் அரண் போன்றவராவர். இவர்கள் விரும்புவது என்றும் ஒருவரின் மகிழ்ச்சியான நிலையையே! தம்தம் பழைய தொடர்புகளை மீண்டும் நினைத்துத் தம்தம் உடைமைகளை ஒருவர்க்கொருவர் ஈந்து கொள்ளுதலும், அதன்வழி இணைந்து கொள்ளுதலும் எனப் பொருந்திக்கொள்ளும் உறவு நிலைகளாகும் இவை.

2. ON RELATIONS.

Relatives are our own. Who come
To us are relations. Welcome
Guard's re these to the poor, desire joy.
Share good, old connections to buoy, 42

Those with whom we have the right to have intimate contact are our relatives; and these who come to us for social contact are relations. Both are of the nature of a welcome fortress to the poor. These ever wish for one's joyous state. Recalling past contacts, we should willingly share our belongings to buoy up their spirits and thereby continue to keep up the relationship.

3. நட்பு நிலை.

நட்பரிது நட்டல் நனிவலிது நட்டாலும்
திட்ப முறலரிது தேர்கவே !—ஒட்பம்
உயர்வென்க உள்ளம் உறழ்ந்துநடு மாறின்
அயர்வென்க ஆரு முயிர்க்கு ! 43

பொழிப்பு : நட்பு வாய்ப்பது ஒருவர்க்கு அரியது. அவ்வாறு நட்பு வாய்க்கின் அந்நிலை அவர்க்கு மிகவும் வலிமையைத் தருவது. அவ்வாறு சிறந்த முறையில் ஒருவரோடு நட்பாடினாலும் அத்தொடர்பு திண்மையுறுதல் மிகவும் அரியது என்று அறிந்துகொள்க. அவ்வாறு திண்மை கொண்டு விளங்கும் நட்பு அறிவுடன் இயங்குவதாயின் இன்னும் மிகவும் உயர்வாக மதிக்கப்பெறுவதாகும். அத்தகைய நட்பாடிய உள்ளங்கள் முரண்பட்டு நடுநிலையினின்று மாறுபடின், அந்நட்புணர்வைத் துய்த்து மகிழ்ந்த இரண்டு உயிர்களுக்கும் அந்நிலை மிகவும் அயர்வைத் தருவதாகும்.

3. ON FRIENDSHIP.

Rare is friendship; strength it will be.
Grow stronger's rare, wish high to see.
If such hearts from right path differ
Weariness they'll surely suffer. 43.

It is very rare to find friendship If by chance you find a friend, that will be a good strength for you. If a friend is secured in the right way, it is rare for that friendship to grow strong If then it be weded to wisdom, it should be esteemed very high. If these hearts ever swerve from the right and differ in views, life will be dull and weary.

4. இன நிலை.

மொழிநிலம் நாகரிகம் பண்புநா டாட்சி
வழியினம் ஆருவகுப்ப—கழியினென்
ருங்கதுமுன் ஞேங்கும் அகத்தே மொழியோங்கின்
நீங்குபவே தோன்றல் நிறம். 44

பொழிப்பு : மொழி வழியாகவும், நில வழியாகவும், நாகரிக வழியாகவும், பண்பாட்டு வழியாகவும், நாட்டு வழியாகவும், ஆட்சி வழியாகவும் இனவுறவு நிலை ஆருக வகுக்கப்பெறும். இவற்றுள் ஒன்று ஏதாம் ஒரு கரணியத்தால் வலிவிழந்து கழிந்து போகு மாருல், அதற்கு முன் உள்ள உணர்வு நிலை தலையெடுத்து, அந்த இனத்தைக் கட்டுறுத்துக் கொண்டிருக்கும். இவ்வுணர்வு நிலைகள் யாவையினும் முதலாவதாகிய மொழியுணர்வு ஓரினத்தின் உள்ள வெழுச்சியாக இருக்குமாயின், அவ்வினத்தில் தலையெடுக்கும் பிறவி நிலை வேறுபாடுகளும் நிறநிலை வேறுபாடுகளும் நில்லாது நீங்கிவிடும்.

4. OF THE RACE.

Language, land. look, rule,
And country are the six to pool.
If one is weak the next rule finds.
If language rules, race it binds. 44.

Relationship of the race is known by the six, namely language, land love engendered by civilization, characteristic trait, country, and rule. If for any reason, of the six one be weak and found wanting the feeling previous to it crops up to effect an internal binding of the race. If feeling for the language, the first of the six, predominates as the heart-felt feeling of the race, other feelings of birth, colour and the like will vanish.

5. துணை நிலை.

உள்ளம் புணர்ந்தார் உறுதுணைமற் றொண்பொருளாற்
கொள்ளுந் துணையென்றுங் கூடாதே—வெள்ளம்
எரிகாற்று வேந்துமிகின் எதுதுணையாம் எங்குந்
தெரிபொருளே அற்றார் துணை! 45

பொழிப்பு: உள்ள வுணர்வுகளுக்குப் பொருந்தியவகையில் இணைந்த ஒருவரே உற்ற துணையாக இருத்தல் முடியும். காட்சிப் பெருமைக்குரிய பொருள்களைத் தந்து பெறுகின்ற துணை என்றும் கூடாதாம். வெள்ளமும், எரியும், காற்றும், அரசும் அளவின் மிகுந்துவிட்டால் ஒருவர்க்கு ஒரு துணையும் பயன்பெறுவதில்லை. ஒரு துணையும் அற்ற ஏழைகளுக்கு எங்கும் நிறைந்து விளங்கும் மெய்ப்பொருளே துணையாக நிற்கும்.

5. ON AID.

Aid through united hearts proper;
Aid through riches can nev'r prosper.
Floods, fire, wind, king are aids in bounds.
Poor's to Omnipresent redounds. 45.

One who fits in with the feelings of heart alone can come in as aid proper. Aid acquired in exchange for riches or bewitching things of life would never do. No benefits will accrue from floods, fire, wind and king, unless they are within limits. The credit of aid to the destitute redounds to the glory of the Omnipresent.

10. அயலியல்.

1. நொதுமல் நிலை.

நொதுமல் பொதுவர் நொடிவார் அவர்கொள்க
எதுமற் றவர்க்கினிதெனல் ஏற்க—கதுமென்று
தாம்விலகிக் கொள்க தமைத்தவிர்ப்பின் தாங்காதார்
ஆமென் றவரணைக ஆங்கு! 46

பொழிப்பு: நொதுமல் எனப்படுபவர் நட்பும் பகையுமற்றுப் பொதுவான நிலையிலுள்ளவர்கள் ஆவர். உலக நிலைகளில் நலிந்து வாடுபவர் அத்தகையவர்களைத் துணையாகக் கொள்க. அக்கால், அவர்களுக்கு இனியதாவது எஃது என்று கண்டறிந்து, அதனையே தாமும் இனியதென்று ஏற்றுக்கொள்க. அவர்கள் தம் தொடர்பைத் தவிர்க்க விரும்புவார்போல் தெரியவரின், விரைந்து அவர்பாலிருந்து தாமே முன்னதாக விலகிக்கொள்க. அவ்வாறு அவர் தொடர்பைக் கைவிட்டுத் தாம் வாழ இயலாதவர், அவர் தம்மை விலக்காததற் குரிய தன்மைகளை 'ஆம்' என்று ஒப்பி, அவர்களை முன்பு நின்ற நிலையிலேயே அணைந்து கொள்க.

10. NEIGHBOURHOOD.

1. ON NEIGHBOURS.

Neighbour's neutral whom weak should hold.
What's sweet to these is sweet untold.
From who desire to part, part quick;
Who can't part as of old shall stick. 46.

Neighbours are those around, who are neither friendly nor inimical but neutral. To these the destitute who wear out in the world shall hold on as proper aid Find out what will be sweet and agreeable to them and take to that as the sweetest thing for you. From those who wish to leave you, it is better than you part quickly. If it be not possible, say 'amen' to all that will make them hold on and stick to them as of old.

2. வெறுக்கை நிலை.

வினைவெறுக்கை உள்ளுறழ்ச்சி! வேண்டார் தவிர்க்க
முனைவதொன் றுண்டால் முகக்க—புனைவதுவும்
கோள்வரை யிட்ட குனிவென்க ஆங்கதுவும்
நாள்வரை யிட்ட நடை! 47

பொழிப்பு: புற வினைகளின்மேல் ஏற்படும் வெறுப்புகளாலேயே ஒருவரின் உள்ளத்தில் மாறுபாடு தோன்றும். எனவே ஒருவரின் உள்ள மாறுபாட்டை விரும்பாதவர்கள் அவ் வுணர்வுக்கடிப்படையாக உள்ள தம் புற வினைகளைத் தவிர்த்துக்கொள்க. ஒருவர் துணையோடு தாம் முயன்று செய்யும் நிகழ்வு ஒன்று உண்டாயின், அவ்வகையில், அவரின் மனவுணர்வுடன் ஒத்து இயங்கி அதனை வெற்றி கொள்க. அவ்வாறு ஒத்து இயங்கும் புறவியக்க நிலையும், தமக்குரிய ஒரு குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு பணிவு என்று கருதிக்கொள்க. அவ்வாறு நடப்பதுவும்கூட ஓர் எல்லைப் பட்ட கால வரையறையைக் கொண்டதாகும் என்க.

2 OF AVERSION.

Dislike changes heart, work do shun.
If work needs aid, work in union.
Such work is service with an aim,
And is on the run for a time. 47.

Disgust on things external creates an undesirable change of heart. So those who desire no such change should give up all objective work If there be an occasion to work with others, to do it successfully, it is neceessary to be in mental agreement with the other. Such work is agreement is service undertaken with an aim and such conduct is only for a limited time.

௩. முரணிலை.

உள்ளம் உகப்பே உறுவினையே சொல்லாட்டே
கள்ளத் தியங்கின் கடுமுரணும்—கொள்ளத்
தக்க தெனில்தாழ்க தாழாமை முற்றுமெனில்
ஒக்க விடல்தொடர்பை ஓர்ந்து ! 48

பொழிப்பு : உள்ளத்தின் மகிழ்ச்சியும், அதன் வயப்பட்ட வினையும், அதன் தொடர்பாகிய சொல்லாடல்களும் பொய்யான நிலையில் இயங்குவன ஆயின், அவையே இயல்புக்கு முரண்பட்ட நிலைகளாம். அவை ஒருவன் ஏற்றுக் கொள்ளத் தக்கவையாயின், தன் நிலைகளைத் தாழ்த்திக்கொண்டு ஏற்றுக் கொள்ளலாம். இனி, அந்நிலைகளே முற்றிய நிலைகளாயிருந்து அவற்றைப் பொருதார் அவற்றைச் செய்வாரிடத்து நின்று நீங்கி அவர் தொடர்பை அறிவோடு எண்ணி, முற்றும் நீக்கிக்கொள்க.

3. ON VARIANCE.

Heart's joy From deed and speech, ensue;
Are sure variants, if untrue.
If right, accept, stoop to rejoice;
Or else to shum it is your choice. 48.

If the joy of the heart and the consequent deed and speech proved to be feigned and not real. naturally that are variant in state. If however they appear to be proper for acceptance, condescend to aceept and rejoice. If they are unacceptable it is better to sever all connections with the one who causes such a stage.

4. காழ்ப்பு நிலை.

பொருளால் புகழால் பொலிதிறனால் கல்வித்
தெருளால் திரள்திரிபு தேர்க—அருளளியால்
மாற்றார்க் கதுகாழ்த்து மன்னுயிரைத் தேய்த்தெடுக்கும்
கூற்றாகும் நெஞ்சங் குடைந்து ! 49

பொழிப்பு : ஒருவர்க்கு வந்து சேரும் பொருளாலும், புகழினாலும், நிறைந்த திறன்களாலும், கல்வித் தெளிவினாலும் மற்றவரிடத்துத் திரள்கின்ற திரிபுணர்வைத் தேர்ந்துகொள்க. பிறரிடத்து முகிழ்க்கும் அவ்வுணர்வைத் தம் அருளாண்மையால் மாற்றவியலாதவர்க்கு அது காழ்ப்புக் கொண்டு, தம் நெஞ்சத்தைக் குடைந்து வருத்தித் தம்முடைய நிலையான உயிரைச் சிறிது சிறிதாகத் தேய்த்து, இறுதியில் அதனை உடலினின்று பிரித்தெடுக்கும் கூற்றாக வந்து நிற்கும்.

4. ON ENVY.

Other's miscomception to spot
Riches, fame, skill, knowledge you've got.
When grace can't wipe, it does take root
In heart shapes spirit's export. 49

By riches, fame, skill and knowledge (acquired by education) one can spot out the enary umplanled in others, When it is in the bud, by a merciful appreach, try to nip it. When this is not done, it takes root, develops to cull out and export the spirit away from the body. It is like Death to make the spirit depart.

5. பகை நிலை.

வெறுக்கை முரணாகி வேர்விட்டுக் காழ்த்துப்
பொறுக்கவிலாப் புன்பகையாப் பூக்கும்—மறுக்கை
கருத்தென்னின் ஆடி வினையென்னின் காத்துத்
திருத்துண் டேடல் தேறிக் கொளல். 50

பொழிப்பு: ஒருவரின் உள்ளத்தில் ஏற்படும் வெறுப்பு, வினைகளில் முரண்பட்டு நின்று, பின் வேர்விட்டு வளர்ந்து முதிர்வுற்றுத் தாம் பொறுத்தற்கியலாத புல்லிய பகையாகப் பூத்துவிடும். எனவே, மறுத்தற்குரியது கருத்தளவாயது என்னின் அதனை உரையாடிச் சரிசெய்தலும், வினையளவாயது என்னின் தன்னைப் பொறையால் காத்துக்கொண்டு திருத்துவதற்குரியதென்னின் திருத்தி அப்பகையினின்றும் தம்மைத் தேற்றிக்கொள்க.

5. ON ENMITY.

Dislike varies, takes root, and springs,
As bud, matures and enmity brings.
If in thought, speak out. derd, forbear
Find ways to mend and quickly wear. 50.

Dislike develops takes root and shoots out buds to blossom forth fully as petty enmity. If it be in thought, get rid of it by speaking out. If it be in deed, patiently bear it and refrain from retaliation If mending be possible consider all possible ways and to mend and to wear it out quiekly and thus seek safeguard for you.

நாயின் சாவம்!

—பெருஞ்சித்திரனார்.

பாட்டனார் வளர்த்த பழுநிற நாயது!
ஓட்டமும் நடையும் ஓங்கிய கால்களும்
நீண்ட காதும் நெடியதோர் வாலும்
தூண்டில் மீனெனத் துள்ளும் கண்களும்
கூர்த்த முகமும் கொடுவாய்ப் பற்களும்
சீர்த்த பல்லிடைச் சிவந்து தொங்கும்
நீர்த்த நாவும் நீண்டு திரண்ட
உடலும் பொருந்தி ஓநாய் போல
அடலுறக் காட்சி அளித்திடும் அந்நாய்!
துருதுரு வெனுமதன் தூய்தமிழ்ப் பெயரோ
மருதன் என்பது! மனத்தில் இனிப்பது!

பாட்டனார் இருந்தது பக்கத்துச் சிற்றூர்!
கூட்டுப் புருவெனக், கோடை வந்ததும்
சிற்றூர் நோக்கிச் சிறகடித் தேகி
முற்றும் ஆங்கே முழுவிடு முறையும்
இன்பமாய்ப் போக்குவோம் இளமைப் பொழுதிலே!
அன்பும் அணைப்பும் அருந்தலும் நொறுவையும்
பாட்டியும் பாட்டனும் பயின்று தந்ததால்
போட்டி கொண்டு நானும் தமக்கையும்
சிணுங்க லாடியும் சீரா டியுமாய்ப்
பணங்களும் காசும் அவரிடைப் பறித்துச்
சந்தைக் கடையின் சரமுறுக் குக்கும்,
மொந்தை வடைக்கும், முழுநுங் குக்கும்,
பலகறை யிட்டுப் பனையிற் பின்னிய
கிளுகிளுப் பைக்கும் கிழங்குக் கும்—எனக்
கொண்டு கொடுத்துக் குவைமடி கட்டி
நொண்டி நடையொடு மனைமுகம் நண்ணிப்
புளித்த நாற்றின் புனைமணிக் கயிற்றினை
வலித்துப் பின்னிய வடிகாற் கட்டிலின்
மேலுற அமர்ந்து மிசைந்திடு பொழுதில்
காலிடைத் தொடர்ந்த களைப்பினால் அந்நாய்
கட்டில் மருங்கில் பின்கால் கவட்டி
முட்டென முன்கால் ஊன்றிமுன் அமர்ந்து,
தொங்கிய செந்நா உமிழ்நீர் சொட்ட
எங்களை மாறியும் மாறியும் ஏங்கிப்
பார்க்கும் பார்வையும் பக்கச் சாயலும்

சேர்க்கும் நொறுவை சிக்கெனப் பிடிப்பதும்
பசுமையா உள்ளம் பதிந்தநற் காட்சி!
குசுமலும் உறுமலும் காதினிற் குழையும்!

2

ஒவ்வொரு நாளும் மருதனின் உழைப்பு
எவ்வொரு மாற்றமும் இன்றி நடந்தது!
விடிய விடிய விழிமூ டாமல்
கடியக் குரைத்தெமைக் காவலிற் காத்து,
வெள்ளி யெழுகையில் பாட்டியோ டெழுந்தே
அள்ளித் தெளிக்கும் சாணநீர் ஆடி,
பாட்டனார் தூக்கும் பழையெருக் கூடையோ
டோட்டங் காட்டிக் காடேற் றுளைந்து
வீடும் காடுமா விடிய நடந்தே
ஆடுங் காட்சியோ அழகு மிதக்கும்!

காட்டில் அதற்குக் கடும்பணி உண்டு!
மேட்டிற் புரளும்! மாடுகள் விரட்டும்;
காக்கை குரைக்கும்! ஆடுகள் காக்கும்;
ஈக்கள் துரத்திட இங்குமங் கோடும்;
குத்தென நிற்கும்; காதுகள் கூர்த்துச்
செத்தையும் சருகும் மூக்கால் சிதர்க்கும்!
பாட்டனார் சோற்றைப் பாங்குறக் காக்கும்!
போட்டது தின்னும்! பொழியும் ஏற்றநீர்
அக்கையும் நானும் முக்கி யெடுக்க
திக்குமுக் காடும்; திமிறி வாங்கி
ஓடிடப் பார்க்கும்; உடலம் நடுங்கநீர்
ஆடிய பின்னற் அதன்பொன் மேனி
நனைநீர் துடைக்க நயந்துடல் கொடுக்கும்!
பனைநீர்த் தேறல் யாமெலாம் பருகி,
வீசிய கோட்டை விருப்பொடு நக்கும்!
பேசிய பேச்சின் பொருள்பிரித் துணரும்!

—இன்ன படியெம் பாட்டனார் இனியநாய்
நன்னுறுந் தோழனாய் நயந்து பழகி.
எம்மோ டுண்டும் எம்மோ டாடியும்
எம்மொடு துயின்றும் இருந்தநாள் ஏக,

விடுமுறை கழிந்து விருப்பிலா மனத்தராய்
அடுநகர் திரும்பிடும் அந்தநாள் காலை
பிரிவு வருந்தி ஊரைப் பிரிகையில்
பரிவுற எம்கால் பக்கலில் சுற்றி
முக்கொடும் முணகொடும் முகர்ந்து வருந்தி,
திக்கு நோக்கித் தெரிந்த பாதையில்
நின்றும் ஓடியும் நெடுவழி காட்டி
ஒன்றிய பேருந்து நிலையத் தொதுங்கி,
எம்மைப் பாட்டனோ டிருந்துவழி அனுப்பி,
அம்ம, அதன்பின் அருந்தலும் உறக்கமும்
இன்றி மூன்றுநாள் இருந்ததன் அன்பைப்
பின்வரும் பாட்டனுர் பிரிவாற் றுமையின்
மடல்படித் தறிவோம்! மறக்கிலோம் இன்னும்!
கடல்நிலத் தன்பின் கனிவையென் னென்போம்!

3

ஆண்டு முடிந்ததும் அடுத்த விடுமுறை
ஈண்டி வருவதை எதிர்பார்த் திருப்போம்!
தோழமை நாயின் தொல்முகம் காண
ஆழங் காணுவோர் ஆர்வங் கிளர்ந்தெழும்!
வருநாள் குறித்து வரைந்த மடற்படி
திருநாள் அதனில் நானும் தமக்கையும்
உந்தினின் றிறங்கித் தரைக்கால் ஊன்றிடச்
சந்தி நுழைந்து சாட்டைவால் ஆட்டி
ஓடியும் திரும்பியும் உடல்மேல் தாவியும்
ஆடியும் குதித்தும் அதன்கால் தந்தும்
மருதன் எம்மை வரவேற்ற மாண்பை
முருகிய தமிழிலும் முழக்கிடல் அருமை!

எப்பொழு தும்போல் மருதனின் இணைவால்
முப்பொழு தும்யாம் ஆடல் முகிழ்த்தோம்!
ஒருநாள் மதியம் உண்டபின் மருதன்
தெருநாய் இரண்டுடன் ஆடித் திளைத்தது!
மாலையும் வீடு திரும்பிலை மருதன்!
சாலையும் சந்தும் சதுக்கமும் தேடி
அலைந்தும் மருதன் அகப்பட வில்லை!
குலைந்தது நெஞ்சம் குமுறி யழுதோம்!

இராவுண வுண்ணும் வேளையும் எம்மனை
வராம லிருந்தது மருதன்! பாட்டனும்
எங்களைத் தேற்றி இரவூண் அருந்தினார்,
திங்களும் எழுந்து தெருவெலாம் ஒளிர்ந்தது!
மருதன் இலாமல் மனம்மிகக் கவன்றது!
வருதுயில் இன்றிப் படுக்கையில் வறிதே
புரண்டுகொண் டிருந்தோம்! போனது தூக்கம்!
மிரண்டு மிரண்டு விழித்தன கண்கள்!

நட்ட நடுவிரா நடந்துகொண் டிருந்தது!
வெட்ட வெளியினில் ஆங்கொரு வெறிநாய்
ஊளை யிட்டே ஊரை அலைத்த(து)அவ்
வேளையில் யாரோ வீட்டுமுன் கதவைப்
பிறுண்டுதல் கேட்டோம்! பாட்டனார் பெயர்ந்து
திறந்தனர் கதவை; திகைத்தோம் யாங்கள்!
மருதன் உடலில் மண்டி வழிந்த
குருதியும் புண்களும் கண்டுளம் குமைந்தோம்!
நொண்டி நொண்டி நொந்த உடலுடன்
அண்டிய தெங்களை! யாரோ அடித்துளார்
என்று பாட்டனார் இயம்பினார்; அதன்பின்
சென்றதன் புண்களைச் சீர்செய்து துடைத்தோம்!
பாட்டியும் உணவிடப் பருக்கையும் கொளாது
நீட்டிப் படுத்தது நெட்டுடல்; வருந்தினோம்!
திக்கிய மூச்சொடும் திரும்பா முகத்தொடும்
முக்கலும் முனகலு மாக மொய்துயர்க்கு
உடலம் நடுங்கி உளைந்துகொண் டிருந்தது!
படுதுயர் கண்டு யாங்களும் பதைத்தோம்!
இரவு முழுவதும் மருதனின் இழுகுரல்
நிரவி எங்களின் நினைவில் ஆழ்ந்தது!

4

மறுநாள் காலையில் மருதனின் புண்ணுக்கு
நறுமருந் திட்டார் நாட்டு மருத்துவர்!
அதன்பின் மூன்றுநாள் அசைவே இலாமல்
கதகதப் பானவோர் கம்பளிப் போர்வையுள்
மருதனைக் கிடத்தினோம்! மனமகிழ் வின்றி
இரவும் பகலும் நானும் அக்கையும்

அதனுடன் பக்கலில் அமர்ந்தாங் கிருந்தோம்!
எதுவும் உண்ணா திருந்தது மருதன்!
ஆளுக்கு ஆளதை அன்பொடு புரந்தும்
நாளுக்கு நாளதன் நலிவு மிகுந்தது!

நான்காம் நாளின் இரவு நடக்கையில்
தூங்கா திருந்தயெம் பாட்டனார் தொல்லையால்,
மருதனை நோக்கி மனப்புழுக் கத்துடன்
"பொருமலும் அணத்தலும் பொங்குகண் ணீருமாய்
இருந்து கிடந்தெமக் கேன்துயர் தருகிறாய்?
பெருந்துயர்ப் படவுனைப் பிழைத்தவன் தன்னைச்
சாவித்து விட்டுச் சடுதியில் நீயுமுன்
ஆவி துற,போ" என்றே அதட்டினார்!

அன்பாய் வளர்த்தவர் அழலுரை கேட்டதும்
முன்புதான் கொண்ட முனகல் அடக்கி
வருந்திக் குமைவது போலவாய் வாளாது
பொருந்தி யமைந்தது; புழுவெனச் சுருண்டதே!

அன்றிரா முழுவதும் அமைதியாய்க் கழிந்தது!
நன்றாய் உறங்கி நாங்கள் காலையில்
எழுந்து பார்த்தோம்; மருதனங் கில்லை!
விழுந்தடித் தோடி வீதி, மரத்தடி,
கொட்டில், எருக்குழி, குடம்பை, அடியெலாம்
எட்டியும் பார்த்தும் எங்கும் இலாமையால்,
உளந்துடி துடிக்கக் காட்டுக் கோடினோம்!
களந்துழா விட்டுப், பட்டி காணாது!
கிணற்று மேட்டின் கீழ்ப்புறத் தடுக்கிய,
பணக்குன் றென்றெம் பாட்டனார் சொல்லும்
கருங்கற் குவியலின் கண்ணிடுக் கெல்லாம்
நெருங்கிப் பார்த்து; நெஞ்சு வருந்த
பூட்டைக் காலத்துக் காவல் புரிதரப்
பாட்டனார் படுக்கும் பரணுக்கு வந்தோம்!
ஐயகோ! ஆங்கே, அறிவு மருதன்
வெய்யொரு பள்ளம் விளங்கத் தோண்டி
உள்முடங் கியவா றுயிர்துறந் திருந்ததே!
கொள்துயர் எங்களைக் கொண்டதா, அன்றி

நாங்களே அதனுள் நான்று கொண்டமா?!
ஆங்கவ் விளந்தைப் பருவத்து அத்துயர்
தளிர்தா மரையைத் தணல்காய்ச் சியதுபோல்
குளிரிள நெஞ்சைக் கொடுமை செய்தது!

5

மருதன் இலாவூர் மண்ணூரர் ஆனது!
பெருமை இழந்தன பெற்ற நொறுவைகள்!
சப்பிட்டுப் போயின சந்தையங் காடிகள்!
மப்புப் பிடித்த வான்போல் மனமெலாம்
இன்ப வொளியிலா திருண்டு போனதே!
அன்புறு பாட்டனூர் பாட்டியின் அணைப்பெலாம்
இனித்திட வில்லை எங்கட்கு! யாங்கள்
தனித்திருப் பதுபோல் உணர்வு தணந்ததால்
மயர்விலா அன்பின் மருதனின் நினைவோ
டுயிர்கரு காமல் ஊர்வந்து சேர்ந்தோம்!

ஊர்வந்த பின்னர் பாட்டனூர் உகுமடல்
சேர்ந்தது! அதனுள் "மருதன் சென்றபின்
நான்காம் நாளில் நாகப்பன் என்பான்
ஆன்றொரு வெறிநாய் கடிபட் டிறந்தனன்"
என்னும் செய்தி எழுதி யிருந்தது!
மன்னிய மருதனின் மனத்தெழு சாவமே
அவனைக் கொன்றதென் றக்கால்
தவலற எங்கள் தந்தைசொன்னரே!

"தமிழ்ச்சிட்டு"

சென்னை - 5.

	உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடு.
ஆண்டுக்கட்டணம் உருபா	4-00	9-00	9-00
தனியிதழ் ,,	0-35	0-75	0-75

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஒரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க!

தனிம வரிசை.

இல. க. இரத்தினவேல், அறி. மு.
அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி,
செய்யாறு-604407.

1. செம்பு (COPPER) CU 63·5 அணு நிறை. 29 அணுவெண்.

தொன் முது பழங்காலத்தில் ஆப்பிரிக்கா, இலங்கை, தமிழ் நாடு, மலேயா முதலியன யாவும் இணைந்து ஒரே நிலப்பரப்பாக இருந்தது என்று எய்க்கல் (Heickel) முதலான பல அறிஞர்களும், புலம்பெயர்வுக் கொள்கை (Continental drift theory)யை எடுத்துரைக்கும் இன்றைய நிலவியல் வல்லுநர்களும் கருத்துரைக்கின்றனர். 'லெமூர்' என்ற குரங்கினம் பெருவாரியாக இருந்தமையால் இந்நிலப் பரப்பை பிறர் இலெமூரியா (Lemuria) என்றும் பழந்தமிழர் கடல்கொண்ட குமரி நாடு என்றும் கூறிவந்தனர். நில நடுக்கோட்டுப் பகுதியான குமரி நாடு, மாந்தன் தோன்றிப் பெருக வாய்ப்பான இடம் ஆயிற்று. இங்கிருந்து மக்கள் கூட்டம் உலகின் பிற நிலப் பரப்புக்குப் பரவியதாகக் கூறுவர். அடிக்கடி ஏற்பட்ட கடல் கோள்களால் இப்பரவல் விரைவுற்றது. விலங்கு நிலையில் இருந்த மாந்தன் இயல்பாகப் பலுக்கிப உலக முதன்மொழிக்கும் உலகில் உள்ள பிற மொழிகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பும் இதனை வலியுறுத்தும். பழந்தமிழ், உலக முதன்மொழிக்கு மிக நெருக்கமான மொழி.

ஓரிடத்தில் இருந்து வேறிடத்துக்குக் குடி பெயரும் மக்கள் தமது பழைய ஊர்ப் பெயரையே புதிய இடத்துக்கும் சூட்டுவது வழக்கம். நானூறு ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் இருந்து அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த மக்களும் இங்ஙனமே தமது பழம் பதிகளின் நினைவாக New York, New Jercy, New Orleans எனப் பெயரிட்டனர். இவ்வாறே கடல்கோளால் சிதறிப் பரவிய பழங்குடி மக்களும் கடல்கொண்ட (தென்) மதுரையின் நினைவாக வைகை மதுரையையும் கண்ணனின் வடமதுரையையும் நிறுவினர்.

ஆப்பிரிக்கா வழியாகத் துருக்கிப் பக்கம் ஒரு கூட்டம் சென்றது. எகுபதிய அரசி ஒருந்தி தன்னைக் குமரிநாட்டுப் பழம்

பாண்டியர் எனக் குறிப்பதனாலும் தமிழ் நாட்டுக் கொள்கையைப் போலவே காக்காசியாவில் ஒரு கொற்கை இருப்பதும் இதனை வலியுறுத்தும்.

இங்ஙனம் வடமேற்காய்ச் சென்ற கூட்டம் ஒரு தீவுள் தங்கியது, அந்தத் தீவில் செம்பு அளவற்றுக் கிடைத்தது. செம்புடன் தொடர்புற்ற இடத்துக்குச் 'செப்பறை' என்று பெயரிடும் தமது வழக்கத்துக்கு ஒப்ப, அத்தீவுக்கு செப்பறை* (Cyprus) எனப் பெயரிட்டது. திருநெல்வேலி யாவட்டம் அரசவல்லிபுரத்துக்கு அருகில் செப்பம்பலம உள்ள ஓர் ஊரின் பெயர் செப்பறை முக்கூடற் பள்ளுவில் கூட "செப்பறை புகு மாட்டை" எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது நிற்க.

இந்தச் சிறு செப்பறைத் தீவே ஐரோப்பா முழுமைக்கும் ஆன செம்புத் தேவையை நிறைவு செய்தது என்றால் இதில் கிடைத்த செம்பின் அளவை ஒருவாறு ஊகிக்கலாம். சிப்பிக்கு அதில் விளையும் முத்து 'உயிர் கொல்லி'யாக விளங்குவதைப்போல் இங்குக் கிடைத்த செம்பு செப்பறையைச் சின்னபின்ன மாக்கியது. அள்ளக் குறையாத செம்பொன்னைக் கொள்ளை கொள்ள விரும்பிய பேரரசுகள் செப்பறையைப் பெரும் போர்க்களமாக ஆக்கிப் பன்னூறு ஆண்டுகள் அல்லோலகல்லோலப் படுத்தின. இங்குக் கிடைத்த செம்பின் வளமும், அதன் மதிப்பரிய விலையும், இததீவை எகுபதியர், அசீரியர், பீனிசியர், கிரேக்கர், பெருசியர், உரோமர் போன்றோரின் ஆதிக்கத்துக்கு மாறி மாறி உட்படுத்தியது.

செப்பறை: செப்பறை (Cyprus) என்பது புதுமையன்று. செப்பறை, வெள்ளறை (தொண்டை நாட்டுத் திருமால்பதி திருவெள்ளறை) எனப் பெயர் பெறுதல் காண்க. செப்பு என்பதில் இருந்து செப்பறை வந்தது போலவே இத்தாலியில் வெண்கலத்துக்குப் பெயர்பெற்ற ஓரிடம் Brindisi (Brundisium) என வழங்கப்

* செப்பறை-CYPRUS; ஒப்ப நோக்குக. தொண்டி-TUNDIS; முசிறி-MUZIRIS (சான்று: Peripeus of the Erythream Sea).

பட்டது. இதில் இருந்தே bronze என்ற சொல் உருவாயிற்று. வெளியக கனிடம் (tin ore) ஆன Cassiterite மிகுந்து கிடைத்த தீவுகள், Casseterides எனப் பெயர்பெற்றன.

செம்புப் பெயர்: செப்பறையில் இருந்து கிடைத்த தாது என்று பொருள்படும் aes cypriun என்ற பெயரே cyprium என்று குறுகி cuprum என ஆயிற்று. இந்த இலத்தீன் சொல்லில் இருந்தே Copper வந்தது.

செம்பைக் குறிக்கும் சில தமிழ்ச் சொற்களும் சிவப்பு நிறம் குறித்த மூலச் சொற்களின் அடியாகவே பிறந்துள்ளன.

'எருவை,யே உதும்ப ரம்,தா மிரம்,ஒடு வடுவே செம்பாம். இதில் எருவை, உதும்பரம், தாமிரம் என்பவற்றின் வேர்ச் சொற்கள் சிவப்பு நிறத்தையே சுட்டி நிற்கின்றன.

(முதல் தாய்மொழி, பக்கம் 152-154)

செம்புக்குரிய "ரௌத்தோஸ்" என்ற ஆரியச் சொல்லும் செந் நிறத்தையே குறிக்கும் பிளினி செம்பை, செந்நிறத் தாது - aes rubrum-எனக் குறித்தார் பழங்காலத்தில் செம்பை செவ்வாய்க் கோளுடன் தொடர்புபடுத்தி யிருந்தனர்.

செம்பின் இருப்பு; செம்பு, பாறைகளிலும், மட்குவியலிலும், கடற் களிமண்ணிலும், ஆற்றுப் படிவுகளிலும் ஏனைய உயிரினங் களிலும் உள்ளது. அரத்தத்திலும் (Blood) கதிரவனிலும் கூட இருக்கிறது. பொருநையாற்றுப் படிவுகளில் செம்பு கிடைத்ததனல் அன்றே பொருநையாறு, செம்பில் என்றும் தாமிரவரணி என்றும் வழங்கப்பட்டது

பயன்: செம்பின் மெல்லியன்மை (malleabelity) யும், உறுதியும் புதுக் கற்கால மக்களுக்குத் தேவையான கருவிகளை வடி வமைக்க வாய்ப்பாய் அமைந்தன.

கி. மு. 6000 வாக்கில் இதனை உருக்கி வடிவமைக்கத் தொடங் கினர். இதுவே மாழையியலின் (matallurgy) தொடக்கம். கி. மு. 5000-க்கு முந்திய எகுபதியக் கல்லறைகளில் செம்புப் பொருட்கள் உள்ளன.

இக்காலத்தில் இருப்புக்கு அடுத்தபடியாய் மிகப் பயன்படும் மாழை செம்பே. செப்புடன் மற்ற மாழைகளைக் கலப்பதால் அதன் வன்மை மிகுகிறது.

எட்டெடை செம்பில் இரண்டெடை ஈயம் இடில்
திட்டமாய் வெண்கலம் ஆம் சேர்ந்துருக்கில்- இட்டமுடன்
ஓரேழு செம்பில் ஒருமூன்று துத்தம்இடில்
பார்அறியப் பித்தளையாம் பார்

என்ற கணக்கதிகாரப் பதின்மூன்றும் பா செப்புடன் ஆன கலப்பு மாழைகளைக் குறிப்பிடுகிறது. வெண்கலம், பித்தளை என்ற கலப்பு மாழைகள் செம்பைவிட மிகுந்த வன்மையும் உறுதியும் வாய்ந்தன. கணக்கதிகாரக் காரிநாயனுர் காலத்துக்கு முன்னர் 8:2 என்றிருந்த வெண்கலக் கலப்பு, இக்காலத்தில் 9 : 1 எனப் பெருவாரியாய் உள்ளது.

தாமிரக் கூடிகைகள் (Copper Compounds) பசு நிறத்தால் ஆனவை. (எ-டு: மயில் துத்தம்) இவை வசு [பசு-வசு-வச் (vatch]) என்று எகுபதியரால் குறிக்கப்பெற்றன.

குறியீடு : மாழைகளை, பழங்கதைக் கடவுளருடனும், விண் கோள்களுடனும் ஒப்பக் கருதினர். பழம் இயைபியலார் (alchemists) தொடக்கக் காலத்தில் செம்பு, செவ்வாய் (mars) க் கோளுடன் தொடர்புறுத்தப்பட்டது. பின்னர் எப்படியோ காமி அல்லது இரதி (Venus) எனப்படும் தேவதையும் அதனுடன் ஆன வெள்ளிக் கோளும் செம்புடன் தொடர்புற்றன தங்கத்தின் குறியீடுபோல் செப்பை 'ஓரளவு தங்கம்' ஆகக்கருதி சிறு மாறுபட்ட குறியீட்டால் தனர். டால்ட்டனின் குறியீடு C. தற்போது வழக்கில் உள்ள பெர்சீலியசு குறியீடு Cu-அ∴தாவது செப்புக்கான cuprum என்ற இலத்தீனச் சொல்லின் முதல் இரு எழுத்துகள்.

தாமிரம் எருவை வடுவே சுற்பம்
உதும்பரம் சீருள் சீருணம் செம்பே !

அன்பர்கள் கவனத்திற்கு.

கடந்த ஓராண்டுக் காலமாகத் 'தென்மொழி' அலுவலகம் முறையாகச் செயல்பட முடியாதபடி பல்வகை இடையூறுகள் இருந்தன. எனவே, தென்மொழி விடுப்பதில் பல குழறுபடிகள் நேர்ந்திருக்கலாம். அன்பர்கள் அவற்றைப் பொருட்படுத்த வேண்டா. முறையான அலுவல்கள் தொடங்க இன்னும் ஓரிரண்டு மாதங்கள் ஆகலாம். அதுவரை, முன்பே பணம் விடுத்து இதழ்கள் கிடைக்கப்பெறுத அன்பர்கள் தங்கள் உறுப்பினர் எண்கள், அல்லது தொகை விடுத்த விளக்கங்களுடன் புதிதாகத் தொடர்புகொள்ள வேண்டுகின்றேம்.

— அமைச்சர், தென்மொழி,

(அட்டை 4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாக இம்மடலைத் தங்களுக்கு அனுப்புகிறேன். தங்களின் புதுவை வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

—ந. வீரப்பன், அ.இ.; ச.இ. (B.Sc,, B.L.)

வழக்குரைஞர், புதுவை-1.

0 : 509 நெஞ்சிலுரமும் நேர்மைத் திறமுங்கொண்டு வெஞ் சிறை மீண்ட செஞ்சொற் பாவல !

தாங்கள் விடுதலை பெற்ற செய்தியினைத் தமிழ் (!) நாளிதழ் ஒன்றின் வாயிலாக அறிந்தேன் ; பெரிதும் மகிழ்ந்தேன். நீக்கரிதாந் துன்பங்கள் தாக்கிய காலையும், குறிக்கொண்ட நோக்கில் இமையளவும் நெகிழாது, மொழி, இன, நாட்டு நலங்காக்க ஏறத்தாழ ஓராண்டுச் சிறை வாழ்க்கையினின்றும் 'சுடச் சுடரும் பொன் போல்' மீண்டு வந்த தங்களை, 'வருக, வருக' என வணக்கஞ்சொல்லிக் கைகூப்பி வரவேற்பதோடு, இறையருளொடு நெடிது வாழ்க என வாழ்த்திப் பெருமைப்படுகின்றேன் ; மகிழ்ச்சியுறுகின்றேன்-

சொந்த மொழி, சொந்த நிலம், சொந்தப் பண்பாட்டின் சுவை நலன்கள் யாவற்றையும், செந்தமிழ் மாந்தர்க்கு உணர்த்தித் தமிழ் நிலத்தை உலகரங்கில் உயர்த்திக் காட்டத் தனக்கென வாழாது, தமிழ், தமிழர், தமிழ் நாட்டிற்காக நெஞ்சொடியப் பேசி. கை வலிக்க எழுதி, வானூர்மதியம் போல் வைகலுந் தேய ஓயாதுழைத்த, ஒப்பிலாத் தமிழ்த் தொண்டராகிய தங்களுக்குக் கிடைத்த அரும்பெறற் பரிசு, ஓராண்டுச் சிறை வாழ்க்கை.

தாங்கள் சிறையிருந்த இடைக்காலத்தே, தங்களது தமிழ்க் குடும்பத்திற்கு உதவிடத் துடித்தது உள்ளம். ஏதோ இதை எழுத்தளவிலே, சொல்லி விளம்பரந் தேடிக்கொள்ள அன்று ; உண்மையுமதுவே ; வெறும் வறுமொழியன்று. என் செய்வல் யான் ? என்றன் குடும்பத்திற்கு, ஒருபொழுது உணவு கிடைக்கவே, ஓவாப் பாடாற்றவேண்டிய, இரங்கத்தக்க இழிநிலையில் இருக்கும் நான், யாங்ஙனம் பிறர் நலம் பேணவியலும் ? மீகாமன் இன்றிக் கடல் நடுச் செல்லுங் கலம் போலிருந்த தங்கள் குடும்பம், தங்கள் வரவால் பெருமகிழ் வெய்தியிருக்கும் ; வாழ்க.

நம்மனோர் அரசமைத்த முரசொலிக்கத் துடித்த – துடிக்கும் தங்களது தூயவுள்ளஞ் செய்த தவிர்க்கவியலாத் தவறு, செந்தமிழின் நலங்கெடக் கெட அதைக் காணப்பொறுது, அங்கே தலையிட்டுக் கிளர்ச்சி செய்த தொன்றேயாம். அத்திறமையும், பற்றுமில்லாத தமிழ் மரபு கல்லாத அரைகுறைகள் எல்லாம், முத்தமிழின் நலங் காக்கப் புறப்படுதலும், பின்னர், தமிழையே விற்றுத் தம் வயிறு நிரப்பும் அத்தமிழ்(!)க் கூட்டம் சிறப்புறுதலும் பலர், புகழ்பாடி

வரவேற்றுப் போற்றுதலும் இந்தத் தமிழ் வழக்குந் தமிழ்நிலத்தில் மட்டுந்தாம் !

போலித்தமிழர், பொய்த்தமிழர், பகடித்தமிழர் பலர் விரவிய இக் குழுகாயத்தில், செந்தமிழின் நலம் பேண, ஓராண்டுச் சிறையிருந்து மீண்ட, தங்களையொத்த தூய மெய்த்தமிழ்த் தொண்டரைத் தேடித் தெளிதல்-அரிதினுமரிதே! தம் வீடு, தம் குடும்பம், தம் முடைமை தம் நலம் பற்றியே இடைவிடாதெண்ணி மயங்கும், 'திருந்தும் வாய்ப்பினைக்கூடப் பெறமுடியாத, முடிவிலா அடிமை இருளில்' சிக்கிச் சீரழிந்துவரும் இந்தத் தமிழினத்தைப் பழந்தமிழ் நெறியிலே செலுத்தத் தலைமையேற்ற தங்களது நன்முயற்சியாம் வழியிலே, சிறை வாழ்க்கை, ஒரு சிறு திருப்பம்; முடிவன்று; இளைப்பாறல் என்றுஞ் சொல்லலாம். தங்களை வீழ்த்தி விட்டதாகவோ, தாங்களே வீழ்ந்துபட்டதாகவோ பிறர் எண்ணுவராயின், அவர் இரக்கத்திற்குரியரே.

ஒரு குறிக்கோளை எய்துவான் வேண்டித்தமது, தூய கொள்கை நெறியிலே துணிவுடன் நடையிடும் தங்களைத் தங்களது தமிழெண்ணங்களை, உணர்வுகளைச் சரியாக உணராத வறுமொழியாளரும், வம்பப்பரத்தரும் தாங்கள் வீழ்ந்துபட்டதாக எண்ணி மகிழக்கூடும்; 'வீழ்ந்து படல மீண்டும, முன்னினும் முடுக்கமாக எழுவதற்கே' என்பதை எழுதவும் வேண்டுமோ ?

இக்காலச் சூழ்நிலையில், தங்கள் வினையினைச் சிறிது காலத்திற்கு ஒத்திப்போடுதல் நன்றும். தான் எனுந் தற்செருக்கும், கல்விப் பரப்புடையேம் எனுந் தருக்கும், தான்தோன்றித் தனமான பேச்சும், மிகக்கொண்டலையும் சில வெறும்பேச்சு வெள்ளை வேட்டிகளையும், மாந்தப் போலியரையும் நம்பி, நாம் வினையில் ஈடுபடவியலுமோ? தம்மைத்தாமே உணர்ந்து கொள்ளாமல், தாழ்நிலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும், இந்தத் தரங்கெட்ட தமிழினத்தை நம்பியா, வினையில் முனைந்து ஈடுபடப் போகின்றீர்கள்? ஐயா, மீண்டும் பணிவுடன் சொல்லுகின்றேன். தாங்கள் தன்மானமிழந்து வரும் புதிய தலைமுறைத் தமிழர்க்கு நற்றமிழ்ப்பற்றும், உணர்வும், நல்லறிவும், எழுச்சியுமூட்டவல்ல பெரும் பேராசிரியராதலே இன்றைய சூழ்நிலைக்கு நன்று. மாறாக, முன்னைய வினையில் மீண்டும் ஈடுபட்டு, அத்தூய நன்முயற்சியினிடையிலே தாங்கள், மீண்டுந் தளைப்படின் தூய தமிழும், தமிழ் வளர்ச்சியுந் தடைப்படுமே! 'தந்தையொடு கல்வி போம்' "தங்களொடு தனிச் செந்தமிழும் போய்விடும்". ஐயுறவின்று. தாங்கள் சிறையிருந்த காலத்தே வெளிவந்த 'தென்மொழி' இதழ்களில் வெறுமையே நிரம்பியிருந்தது என்பதை என்னனையர் பலரறிவர். ஆகவே, தாங்கள் மொழி, இனம் ஆகிய இரண்டையும் முதலில் செம்மைப்படுத்திச் செந்நெறிச் செலுத்த முயலுங்கள். வளர்ந்துவரும்

இளந் தலைமுறையினரையும், ஆசிரிய நன்மக்களையும் தங்கள் தொண்டுக்குத துணை நிற்க அழையுங்கள். தங்களது தூய மொழி, இனத்தொண்டு தொடக்கப் பள்ளியிலிருந்தே தொடங்கட்டும். தொடக்கபபள்ளி ஆசிரிய நன்மக்களுள் தூய மெய்த் தமிழ்ப்பற்றுடையார் பலா. விளம்பரப் பிரியரும் கல்வி வல்லார்போல் மெத்தவும் நடிப்பவரும் பலர். இருப்பினும், தங்கள் தொண்டுக்குத் துணை நிற்கும் துணிவார்ந்த துடிப்புடைய ஆசிரிய நன்மக்கள் இல்லாமலில்லை. தங்கள் மொழி, இனத்தூய்மை நெறியில், அவர்களும் துணிந்து வருவதோடு பயிலும் இளஞ்சிறார்க்கும் தூய மொழிப் பற்றும், உணர்வும ஊட்டிப புதியதோருலகு படைப்பரன்றோ? 'தென்மொழி' வாயிலாக ஆசிரிய நன்மக்களை அழைக்கலாம் என்பது எளியேனது கருத்து. தங்களது கருத்து யாதோ?

எனக்குப் பெருத்த நம்பிக்கையுண்டு; மந்த நடை போட்ட தமிழ் மாந்தரெலாம், தங்களது தலைமையில் மறக்களிற்று வெற்றி நடைபோடும் ஒலி கேட்கும். நம்மனோர் அரசமைத்த முரசொலிக்கும்; எங்குஞ் செந்தமிழ் மணக்கும்; அந்த நன்னாள் விரைவில் வரும்; மகிழ்வு தரும் காலம் வெல்லும்; தாங்களும், அன்புருவாய் தங்கள் குடும்பத்தாரும் இறையருளால், நீடினிது வாழ்க.

அன்பிலே, ஓர் எளிய தென்மொழித் தம்பி,

—பெரு தமிழ்வேந்தன் பவானிசாகர்.

0 : 510 அறஞ்சான்ற அன்பு நெஞ்சத்தீர், அகங்கனிந்த வணக்கங்கள். தங்கள் மன அலைகளைக் கட்டுப்படுத்தி மகிழ்வுறும் அந்த மாக்களை எண்ணி நகைக்கின்றேன்; ஆம், அலைகளை ஒப வைத்தது யார்?

சிறைபூட்டி அரிமாவைச் சிறுநரிகள் பகடி செய்து மகிழ்ந்தாலும், அரிமா ஆமையாகாது. அதுபோல், நரிகள் அரிமாக்களாகா. இஃது உலகியலின் உறுதி வாய்ந்த போக்கு; மாற்றமுடியாது இதை; வேண்டுமானால், மாற்றஞ் செய்திட நினைத்தவர்கள் தாம் மாறிவிட்டதை வரலாறு பலவற்றில் காண்கின்றோம்.

'தென்மொழி' சுவடி 13; ஓலை 7-இல் தாங்களியற்றிய, பழமைப் பாடல்கள் என்னுள்ளத்தைக் கிளர்ந்தெழச் செய்துவிட்டன. தங்களின் சுவடி 7: ஓலை 4-இல் ''தென்மொழி நலமில்லை, நீங்கள் நலமா?'; என்னுங் கட்டுரை நெஞ்சை விட்டகலாத கருத்துப் பெட்டகமாய் நின்றுவிட்ட ஒன்று.

'உள்ளம் பேசுகின்றது' — உரைக்கின்ற ஏக்கங்கள் உண்மை வழி காட்டவும்; உயர்ந்ததென்ற போலி நாகரிகம் படுகுழியில் சாயவும், வழிவகுக்கும் பூஞ்சோலை மணமாடும்; பூரித்து நிற்ப தென்றன் மனமாகும்.

'காதலிக்கு', 'காவிரித்தாய்' பாடல்கள் கருத்தைக் கவர்வதுடன், இப்பாடல்கள் வெளிவந்த 'தென்றல்' ஏட்டின் ஆசிரியர்

(இச்சொல் கூறவும் மனங்கூசுகின்றது) இற்றை நாள் நிலை யெண்ணி மனங் கவல்கின்றது!

மற்றும் பாவாணரின் 'திருவிழந்தோம்' நகைச்சுவையும், மறைமலையடிகளாரின் 'தமிழர் கொள்ள வேண்டுவன' கட்டுரையும், இன்ன பிற படைப்புகளும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந் தமிழினிடத்தில் பற்றில்லாத ம(ா)க்களையும் கிளர்ந்தெழச் செய்யக்கூடிய கீழ்த்திசை எழு ஞாயிற்றின் கதிர்களேயாம்.

'தென்மொழி' மேன்மேலும் வளர, வளர்ந்து தமிழர் மனங் கிளர்ந்தெழ தாங்கள் படுந் துயரங்களை யெண்ணி, மனம் வாடுகின்றது, என்றாலும் தங்களின் உறுதியான ம(ா)ன உணர்வு அவ் வாட்டமென்னுங் 'கறை' மறைக்குந் திரையாகின்றது.

வாழ்க தமிழ்! வளர்க தென்மொழி!

தங்கள் நலம் நாடும், வெ கு. அரசு, மதுரை-10.

0 : 511 பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய ஐயா, பாவலரேறு அவர்கட்கு, சால வணக்கம். மனம், மொழி, செயலால் தமிழுக்காகப் போராடும் தாங்கள் விடுதலை அடைந்த செய்தியினை நாளேடு மூலமாகவும் நண்பர் பரமசிவம் அவர்களின் மடல் மூலமாகவும் கண்டு மகிழ்வெய்தினேன். இப்போது சிவகங்கையில் அமைதியான தமிழுணர்வு நாள்தோறும் வளர்ந்தோங்கி வருகிறது. செந்தமிழ்க் கழகம் என்ற அமைப்பு திரு. வி. முத்துசாமி, க.மு., அவர்களின் பெரும் முயற்சியால் தமிழன்பர் பலரின் கூட்டுறவுடன் சிறப்பாக இயங்கி வருகிறது. வெள்ளிதோறும் திருக்குறள் வகுப்பும், ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளியிலும் தமிழ்ச் சான்றோர் ஒவ்வொருவரைப் பற்றிய சொற்பொழிவும் செந்தமிழ்க் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

—அன்பு. சுப. தமிழ்மகன், சிவகங்கை.

0 . 512 அன்புள்ள ஐயா, அவர்களுக்கு, வணக்கம்: வெஞ்சிறையின் வேக்காட்டிலிருந்து விடுபட்ட செய்தியறிந்தேன். மகிழ்கிறேன்.

இந்த ஓராண்டு இடைவெளியில் தாங்கள் நம் மக்கள் பலரின் இயல்புகளை வேறு பல புதிய கோணங்களிலிருந்து கண்டிருப்பீர்கள். அரசியல் சூழல்கள் பல புதுத் திருப்பங்களால் திரும்பிப் பார்க்கின்ற நாளையில் தங்கள் பணிமுறையில் ஏதேனும் மாற்றும், தற்காலிகமாக, மேற்கொள்ள வேண்டுமென்றே எண்ணுகிறேன். தாங்கள் அறியாததன்று.

தங்கள் உடல்நிலை நன்றாக இருக்கிறதா? நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டுகிறேன் 'தென்மொழி'யில் தங்கள் புதிய சிறைப் படைப்புகளை எதிர்பார்க்கிறேன். அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு உருப் பெற்றிருக்குமென் றெண்ணுகிறேன்,

—செம்பியன் வல்லத்தரசு, பு. புளியம்பட்டி.

ஒருமுறை தென்மொழியில் தாங்கள் முன்பட்ட சிறை நிகழ்வைப் படித்ததிலிருந்து, தாங்கள் சிறையில் நலமுடன் இருப்பீர்கள் என எனக்கொரு நம்பிக்கை. மேலும் தங்கள் போன்ற மெய்யறிவாளர் களுக்குச் சிறையில் எக்கெடுதியும் வாராது என்பதும் நம்பிக்கை! சிறையில் தாங்கள் நூலெழுதுதல் முதலிய பயனுள்ள வினைகளில் ஈடுபட்டு இருப்பதாக அறிந்து மிகுந்த துணிவு கொண்டிருந்தேன். மகிழ்ச்சியும் அடைகிறேன். —அரிமா. வளவன், புதுவை-3-

0 : 502 அன்பார்ந்த ஐயா அவர்களுக்கு, வணக்கம். தாங்கள் விடுதலை ஆன செய்திபற்றி அறிந்து பெரிதும் உவந்தோம். இனித் தென்மொழி தொடர்ந்து வரும் என்னும் நம்பிக்கை கொண்டுள் ளோம். பதினேழு ஆண்டுகளுக்கு மேலாகத் தென்மொழி வளர்த்த நல்லுணர்வு இப்போது அடங்கியும் ஒடுங்கியும் கிடக்கின்றது. இந் நிலை மேலும் நீடித்தல் நல்லதன்று. இதுவரை விளைந்த பயனும் வீணாகப்போகுமாறு விட்டுவிடல் கூடாது. எனவே தங்களை மிகவும் பணிந்து கேட்டுக்கொள்கின்றோம். தென்மொழியை இடையறவு படாமல் வெளியிடும் பணியொன்றிலேயே தாங்கள் முழுக்கவனத்தை யும் செலுத்துங்கள். கற்றோர் எல்லோரும் பெற்றுப் படிக்குமாறு தென்மொழியின் அமைப்பினை மட்டும் சிறிது திருத்தியமையுங்கள். தம் குறிக்கோளில் என்றும் எப்பொழுதும் மாறுதல் இல்லை. தங்க ளின் முதன்மையான பணி தென்மொழியினைத் தொடர்ந்தும்-காலந் தாழ்த்தாதும் வெளியிடுவதாகும். இரண்டாம் பணி அவ்வப்போது தக்கமுறையில் அழைக்குமிடம் சென்று சொற்பொழிவு ஆற்றுவது. எங்களின் இக்கருத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமாய்ப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

—புலவர். பொ. முனியப்பன், கூகலூர்

0 : 503 வயவ! தாங்கள் விடுதலை பெற்றது கண்டு அகமிக மகிழ்ந்தேன். தமிழினம் தங்கட்குப் பெருங்கடன் பட்டிருப்பதைக் காலம் உணர்த்தும். தங்கட்கு என் இனிய நல்வாழ்த்துகள்.

—மறை மணாளன், கீழைக்கரை.

0 : 504 அன்புசால் ஐயா. வணக்கம். தாங்கள், காவலுட் பட்டுக் கடுஞ்சிறை தன்னில் வாடிய போழ்து வருந்திய உள்ளம் விடுதலைச் செய்தி செவியில் விழுந்ததும் நெஞ்சம் மகிழ்ந்தது. நினைவும் பறந்தது. அரசியல்காரர்கள் போல் அங்கும் இங்குமாய் அலைந்து திரியாதும், அண்டியிருந்த நாளெலாம், ‘அவரைப்போல் எவருமில்லை’ எனப் புகழ்ந்துவிட்டு, அடி தாங்காது, அல்லல் தொடர்ந்ததும், ‘இவரைப்போய் பாராட்டினோமே’ என இன்று இகழ்ந்தும் புரள்கின்ற ஆட்கள்போலவும் அல்லாமல் அரிமாவாய் வாழ்ந்திட்ட தாங்கள் இனியும் இன்றமிழ்த் ‘தென்மொழி’ வாயி லாய் எடுத்தியம்பிடும் கருத்தை எண்ணி எதிர்பார்த்துக் காத்துள் ளேன். —சி. கைலாசம், ஈரோடு-7.

0 : 505 தனிப்பெருந் தலைவ! தண்டமிழ்ப் பாவல! சிறை விட்டு வந்த அரிமாவே! நிறைந்த பிடிப்போடு உள்சென்று விடுதலை யாகி வந்த மறவ! தங்கள் வருகையால் மழைமுகம் கண்ட பயிரைப் போல் மகிழ்ந்தோம்.

நீவிர் உள்சென்றபோது எனது பாங்கர் இருவர் அங்குவந்து பூங்குன்றனாரைச் சந்தித்து நூல்களும் வாங்கி வந்தனர். அதோடு சிறிய தொகையையும் யானும் பாங்கர்களும் சேர்ந்து விடுத்தோம். இன்னும் விடுக்கவும் எண்ணியுள்ளோம். இதைத்தவிர வேறு யாதும் செய்கிறோம். —தி. க. மும்முடி முகிலன், முகவை.

0 : 506 மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா, அவர்களுக்கு வணக்கம். நான் பல ஆண்டுகளாகத் தென்மொழி படித்து உணர்வு பெற்று வருபவன். தொடக்கப்பள்ளி தலைமையாசிரியராகப் பணியாற்றி வருபவன். தாங்கள் விடுதலை பெற்று வெளிவந்தது குறித்து மிக மகிழ்வு எய்தினேன். தங்கள் நலம் மிகப்பெற விழைகிறேன். தூங்கு தமிழரைத் துயிலினின்றெழுப்பி ஏங்கு தமிழன்னை ஏக்கந் துடைக்கும் மருந்தாம் தென்மொழி தங்கள் வருகையால் பீடுநடை போடுமென நம்பி ஆவல் உடையவனாய் இருக்கிறேன்.

—கோ. அரங்கநாதன், பெருஞ்சேரி, மயிலாடுதுறை.

0 : 507 பேரன்பின் நல் ஐயா, பணிவார்ந்த வணக்கம். தங்கள் விடுதலைச் செய்தியை அறிந்தேன். நானும் நண்பர்களும் பெருமகிழ்ச்சி யுற்றோம். களைக்கா உள்ளங் கொண்ட தாங்கள் உடல் இளைத்திருப்பீர்களோ என்று கவல்கின்றோம். தங்கள் நலத்தையும் பெரிதும் நாடுகின்றோம். நலமும், வளமும் சூழ தாங்கள் காட்டியுள்ள 'ஓர் இறையை' வழுத்துகின்றோம்.

—மு. செல்வநாதன், சோழலிங்கபுரம்.

0 : 508 அன்புள்ள ஐயா! வணக்கம். தாங்கள் விடுதலைப் பறவையாய் வெளிவந்த செய்தி கேட்டு மகிழ்ந்தேன். தங்களை ஓடோடி வந்து காணவேண்டும். கலந்துரையாடவேண்டும் என்ற எண்ண எழுச்சி மிகையாக இருந்தாலும், வரமுடியாத சூழலில், என்னுடைய மடலாவது எனது எண்ணத்தை எல்லையில்லா மகிழ்வினைத் தெரிவித்துத் தங்களது திருவடிக்கு முன் மண்டியிடாதா என்ற ஆர்வத்தில் இந்த மடலை விடுக்கிறேன். ஓராண்டுக்காலம்; அப்பப்பா! எத்தனையோ நிகழ்ச்சிகள்; எத்தனையோ செய்திகள்; எவ்வளவோ கால மாற்றங்கள்; இவற்றினிடையே மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக எண்ணி அடக்கத்தின் உருக்கொண்டு, அமைதியின் வழிநின்று, ஒருகால் சிட்டிபாபு போன்றோரின் நிலைக்குத் தள்ளப்பட்டுத் தமிழினத்தைத் தவிக்கவிட்டுச் சென்றிடுவாரோ என்றெல்லாம் எண்ணிய எங்களின் துயரக் குமுறல்களுக்கு நடுவே, வெம்பிக் கிடந்த எங்களுக்கெல்லாம் மன நிறைவையும் அளித்து எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்லத் தாங்கள் வந்துவிட்டீர்கள் என்று எண்ணும்போது உண்மையிலேயே மகிழ்வுறுகிறேன். ஏதோ சொல்லடுக்குகளோ என்றில்லாமல் உள்ளத்திலிருந்து கொட்டும் உணர்வு

(உள் 57 ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)